குண்டூசி
ஜனவரி 59....75 சதம்
வாசு பிலிம்ஸ்
ஒரே வழி
ஸ்டுடியோ
ஜெமினி
டைரக்ஷன் · K. சங்கர்
பூரண
செந்தமிழ் சித்ரா
நெ. 25 தாண்டவராயன் தெ

For pleasing results. . .
INSIST ON
Klein & Peyerl BLOCKS
30, MOUNT ROAD, MADRAS-2

இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை :
சித்ரா • பிரபாத்
....சரஸ்வதி....
மற்றும்
திராவிடமெங்கும்!
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
மாமியார்
மெச்சிய
மருமகள்
AVM
புரொடக்ஷன்ஸ்
தயாரிப்பு - டைரக்ஷன் : கிருஷ்ணன் பஞ்சு

இன்றே பாருங்கள்

சென்னை : காஸினோ, பிராட்வே

மற்றும் தென்னாடெங்கும்

சென்னை-600 008

சரும
நோய்களுக்கு
சிறந்த
நிவாரணம்

ஒன்பது வகை உபகரணங்களால் தயாரிக்கப்பட்ட ஜெர்மெக்ஸ், விஷக் கிருமிகளைக் கொன்று புண்களை விரைவில் குணப்படுத்த உதவுகிறது.

Germex
With Chlorophyll
குணமளிக்கும் கிருமி நாசன களிம்பு

தயாரிப்பாளர்கள் :
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசியூடிகல்ஸ் லிட்.,
11/12. முதல் லேன் பீச்,
மதாராஸ்-1

GX-101

இந்த ஊசியில்

ஜனவரி '59

மாலை–2] [மணி–1

பெருமைப்படுகிறோம் ...	5
பொங்கலோ பொங்கல் ...	8
காட்சி கண் காட்சியே ...	10
வாழ்க கணேசன்–சாவித்திரி	14
இது செய்தி ...	21
நட்சத்திரத்துடன் ஒருநாள் சரோஜாதேவி ...	25
பாண்டித்தேவன் பிறந்த கதை ...	41
இல்லறமே நல்லறம் ...	47
வளரும் படங்கள் ...	52
அவள் யார் ... (பட அனுபந்தம்)	60
நடனம் ஆடினர் ...	64
நுனிப்புல் ...	68
கலைக்கூடங்களில் கடந்த மாதம் ...	70
சுமங்கலி ...	76
மாமியார் மெச்சிய மருமகள்	78
மாதவி ... (பட அனுபந்தங்கள்)	80
இரண்டு பொய்கள் ...	84
வாழ்க்கை (வி)சித்திரம் ...	91
கேளுங்கள் ...	94
மரகதம் ... (பட அனுபந்தம்)	99
பொதுஜனம் பேசுகிறார் ...	104
நேயர் விமர்சனம் ...	110
அமைதி ...	114

★

புகைப் படங்கள் :
வி. கோபாலகிருஷ்ணன்

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. யாரையும் குறிப்பிடுபவன அல்ல.



நூறு ரூபாய் தர்மம் செய்துவிட்டு அதை விளம்பரப்படுத்த ஆயிரம்ரூபாய் செலவிடும் 'விளம்பர மனிதர்கள் நிறைந்த இந்த 20ம் நூற்றுண்டிலே திருப்பதி உண்டியில் லட்ச ரூபாய்களை மூட்டை கட்டிப்போட்டிருந்தார் ஒரு பக்தர்.

பெருமைப்படுகிறோம்

இவ்வருஷம் குடியரசு தினத்தன்று, ராஷ்டிரபதி விருதுகள் அளிக்கையில், தமிழ் நாடகத் தந்தை, திரு. பம்மல், சம்பந்த முதலியாருக்கு, 'பத்ம பூஷண்' என்ற விருதை அளித்திருக்கிறார். நமிழ்நாட்டில் பொருத்தமான ஒருவர் கௌரவிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். பூரிப்படைகிறோம். இந்த விருதை பம்மலுக்கு அளித்து இந்திய சர்க்காரும் பெருமை அடைந்தார்கள். தவிர, நாங்கள் பெருமைப்பட இதைவிட வேறு முக்கியமான காரணம் ஒன்றும் இருக்கிறது.

கடந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று இந்திய சர்க்கார் சில சினிமாக் கலைஞர்களுக்கு விருதுகள் அளித்ததைக் குறித்து பாராட்டி கடந்த ஆண்டு பிப்ரவரி மாத இதழிலே ''பார்வையிலே பற்றாக்குறை'' என்ற தலைப்புடன் நாங்கள் ஒரு தலையங்கம் எழுதியிருந்தோம்.

அந்தத் தலையங்கத்தில் ''இந்திய சினிமாக் கலை என்பது வடநாட்டுடன் மட்டும் அடங்கிவிடவில்லை. தென்னாட்டில் அப்படிப்பட்ட விருதுகள் பெறத் தகுதி உடையவர்கள் இருக்கிறார்கள். நாடகக் கலை மூலம் சினிமாக் கலைக்குச் சிறப்பினையும் சிறந்த கலைஞர்களையும் தந்த நமது பம்மல் சம்மந்தமுதலியார் இங்கே இருக்கிறார், இலட்சிய மூச்சு விட்டுக்கொண்டு.'' என்று எழுதியிருந்தோம். 'இந்திய சர்க்கார் வடநாடு, தென்னாடு என்ற பாகுபாட்டை மறந்து உண்மைக் கலைஞர்களை கௌரவத்திருக்குமானால் மேலும் பெருமை கிடைத்திருக்கும்' என்றும் அத் தலையங்கத்தில் நாங்கள் குறிப்பாகச் சொல்லியிருந்தோம்.

எங்கள் தலையங்கம் அரசியலாரின் கண்களில் பட்டு, இவ்வாண்டு பலன் அளித்திருப்பது கண்டு நாங்கள் பெருமைப்படுகிறோம்; பூரிப்படைகிறோம். அடுத்த ஆண்டு மற்றும் திறமையுள்ள பல தென்னகக் கலைஞர்களை கௌரவிக்க முன்வரவேண்டுமென்றும் நம் தேசிய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இதுவா ஒற்றுமை?

இம் மாதம் 10-ம் தேதி முதல் 30-ம் தேதிக்குள் ஆறு படங்கள் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டு விட்டன. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டு விட்டோம். "நாங்கள் அனைவரும் ஒற்றுமையா யிருக்கிறோம்" என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள் நம் படாதிபதிகள். அவர்களின் இந்தப் பேச்சு வாயளவில்தான் நிற்கிறது என்பதை அவர்களது இந்தப் போட்டா போட்டிச் செய்கை நிதர்ஸன மாக்குகிறது, இல்லையா ?

பல மாதங்களுக்கு முன்பே தணிக்கை செய்யப்பட்டு, பல நாட்களாகத் திரையிடத் தயாராயிருந்த படங்களைத் திரையிடும் அதே நேரத்தில்தானா, அப்பொழுதுதான் தணிக்கையான படங்களையும் திரையிடவேண்டும்? நம் படாதிபதிகளிடையே நல்லெண்ணம் பரவியிருப்பது உண்மையானால் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தென்னகப் பட முதலாளிகளுக்கென – அவர்களிடை ஒற்றுமையை வளர்க்கவென—ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் இங்கு இருக்கின்றன. அவைகள் இருந்து என்ன பயன்? சங்கத்தின் உள்ளே அடித்துப் பேசும் ஒற்றுமைக்கு, அந்த சங்கத்தின் காம்பௌண்ட் சுவரைத் தாண்டியதுமே சமாதி வைத்துவிடுகிறார்கள் போலும்!

"ஒரே மாதத்தில் இவ்வளவு படங்களா?" என்று நாம் நினைப்ப தாகக் கருதிவிடவேண்டாம். படங்கள் நிறைய வரவேண்டியதுதான். முதல் மாதம் இரண்டு படம்; இரண்டாவது மாதம் ஆறு படம்; மூன்றாவது மாதம் ஒரு படம் என்ற பாகுபாடற்ற நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள லாம் என்பதே எமது கருத்து. அப்படியில்லாமல், இந்த மூன்று மாதத்தில் திரையிடப்படும் ஒன்பது படங்களின் முதலாளிகளும் ஒன்று சேர்ந்து பேசி, சராசரி மாதம் ஒன்றுக்கு மூன்று படம் என அவர்கள் திரையிட்டால் அது எவ்வளவு நல்ல ஏற்பாடாக இருக்கும். இந்த நல்ல ஏற்பாட்டை அவர்கள் ஏன் உணர்வது இல்லை என்பதுதான் தெரியவில்லை.

தோளோடு தோள் இடிக்க நெருங்கி நின்றும், தோள்மேல் கைபோட் டுக்கொண்டும் புகைப் படங்கள் எடுத்துக்கொண்டால் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதாக அர்த்தமாகிவிடாது. அவர்களிடை உள்ள ஒற்றுமை செய்கையிலே தெரியவேண்டும்.

பண்பற்ற செய்கை

சங்கம் கூட்டி செந்தமிழை வளர்த்து தமிழ்ப் பண்பாட்டை நிலை நிறுத்தி உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மதுரையிலே ஒரு மாண் பற்ற செய்கை சில நாட்களுக்குமுன் நடந்துவிட்டது. நீதியை நிலை நிறுத்த வேண்டி—வளைந்த கோலை தன் இன்னுயிர் கொடுத்து செங்கோலாக்கிய நெடுஞ்செழியன் வாழ்ந்தஇடத்திலே விரும்பத்தகாத செயல் ஒன்று நடந்து விட்டது. 'பகைவனுக்கு அருள்வாய் நெஞ்சே!' என்ற பொன்மொழி யின்படி நடந்து வழிகாட்டவேண்டிய பாண்டிய நாட்டின் தலைநகரிலே தகாத செய்கை நிகழ்ந்துவிட்டது. நீதி கேட்கப்போன இடத்திலே அநீதி நடந்து விட்டது.

நம் சகோதரப் பத்திரிகை "தமிழ் சினிமா"வின் ஆசிரியர், திரு கரீம் தம் மீது தொடரப்பட்ட ஒரு வழக்கின் விஷயமாக மதுரைக்குச் சென்றிருந்தார் அவரிடம், எதிர்வழக்காளர்கள் மனிதப் பண்பாட்டிற்கு முற்றிலும் மாருக நடந்துகொண்டிருப்பதை அறிந்து மிகவும் வருந்துகிருேம். கண்ணியத்தோடு நடக்க வேண்டியவர்கள் கடமை மறந்து-கட்டுப்பாடின்றி நடந்து கொண்டதை அறிந்து மிக வருந்துகிருேம். அதிதியாய் வந்தவரை, முகம் அறியா இடத்தில், துணையற்ற இடத்தில் அடிப்பது என்பது எந்த மனிதப் பண்பாட்டிற்கும் ஏற்றதல்ல. மாண்புமிக்க மதுரை மக்களில் சிலர் இத்தகைய தகாத செயலில் இறங்கி- மதுரைக்கும், தமிழ்நாட்டிற்கும் களங்கம் ஏற்படுத்தியதை அறிந்து மிக வருந்துகிருேம். தனி ஒரு மனிதனின் இந்த இழிச் செயல் மக்களில் ஒரு சாராரது ஆதரவைப் பெற்று வரும் ஒரு கழகத்திற்கே இழிவைத் தேடுவதாக உள்ளது.

இச் செயலுக்கு ஆளான நம் சகோதரப் பத்திரிகை ஆசிரியருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை அறிவித்துக்கொள்ளுகிருேம். இத்தகைய செயல் அந்தச் சிறப்பு மிக்க நகரின் கடைசியாக இருக்கட்டும். நடந்தவைகளை மறந்து இனி நல்லதையே நினைத்து நல்ல செயல்களையே செய்வோமாக.

ஈடுசெய்ய முடியாத நஷ்டம்

பேசாப் படங்கள் வெளிவந்த காலத்திலிருந்தே, சலனப்படத் தொழிலில் பேரார்வம் கொண்டவர் டிமில்லி. மக்களுக்கு நீதியறிவூட்டுவதுடன் பொழுது போக்குக்காகவும் படங்கள் அமைய வேண்டும் என்ற தீவிர கருத்துக் கொண்டவர். கிருஸ்துவ மதத்தில் தீவிர பற்றுக்கொண்டவர். 'கிங்-ஆப்-கிங்ஸ்'' ''தி-கிரேட்-ஷோ ஆன் - எர்த்'' ''தி அன்கான் கர்ட்'' ''சாம்சன் – அண்ட் டிலைலா' "தி டென் - கமாண்ட் மண்ட்ஸ்" போன்ற பல அதியற்புதுப் படங்களை ஏராள பொருட் செலவில் தயாரித்திருக்கிருர். சரித்திர சம்மந்தமான மற்ருெரு பிரமாண்ட படம் தயாரிப்பது பற்றி அவர் கடந்த மூன்று ஆண்டுகளாக தகவல்களை சேகரித்து வந்துள்ளார். இது ஈடுசெய்ய முடியாத நஷ்டம்.

பொங்கலோ பொங்கல்!

பொங்குது பொங்குது பொங்குதடா—தமிழ்
பூதல மெங்கிலும் பொங்கலடா!
திங்களித் தையினில் வந்ததடா—இது
தீராச் சுவையும் தந்ததடா!

காட்டினை மேட்டினை வளமாக்கும்—நம்
காளைகள் மாடுகள் தினமாக
நாட்டினி லெங்குமே காணுதடா—யாரும்
நாடிடுந் திருவிழாக் காட்சியடா!

புதுப்படல் சாத்திப் பொங்கலிட்டு—இளம்
பூவையரோடே பாட்டிசைத்து
நிதமுந் தழையச் செய்வதடா—இந்த
நீணிலந் தனிலே தமிழனடா!

விரைவொடு வறுமை மறைந்ததடா—என்றும்
விளங்கிடச் செழுமை நிறைந்ததடா!
நிறைவொடு எல்லாம் வாய்த்ததடா—இதை
நிமிர்ந்தே பொங்கல் வாழ்த்துதடா!

திரைப்பட நெருக்கடி தீருமடா—இது
தீர்வதே கலைஞர் ஆசையடா!
விரைவினி லதிபர் நம்மையடா—நன்கு
விளங்கிடச் செய்வார் உண்மையடா!

செஞ்சட்டிப் பொங்கலே பொங்குகவே-எங்கள்
செயல் சொல் விளங்கிடப் பொங்குகவே!
வெஞ்சதி பிணிமாளப் பொங்குகவே—எங்கள்
வீட்டொடு மொழிவாழப் பொங்குகவே!

கோவை குமாரதேவன்

இளம் பிராயம் முதல், அழகிய நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கு சிறந்தது.

ஹேரோடின்

உபயோகித்து, அகால நரை, வழுக்கை இவைகளை தடுததுக் கொள்ளுங்கள். "ஹேரோடின்" மூல மயிர்க்கால்களுக்குப் புத்துயிரளிப்பதுடன் மூளைக்கு குளிர்ச்சியளித்து கருமையான கேசத்தை பெருகச் செய்கிறது.

தயாரிப்பு: கர்னடிக் கெமிகல்ஸ், சென்னை-6.

சென்னை T. U. C. S. எல்லா பிராஞ்சுகளிலும் இப்பொழுது விற்பனையாகிறது

காட்சி கண் காட்சியே!





“என்னன்ன, நாம் குழந்தைகளை அழைச்சிண்டு எக்ஸிபிஷனுக்குப் போக வேண்டாமா?” இது சகதர்மிணியின் கேள்வி.

“போதுமே எக்ஸிபிஷன், சைனா பஸார் கடையையெல்லாம் ஒரே இடத்திலே சேர்ந்தாற்போல் கொலு வச்ச மாதிரி கொண்டு வந்து வச்சிருப்பான், அவ்வளவுதான்.” வீட்டுக்காரரின் வெறுப்பான பதில் இது.

வழக்கமாக சென்னை நகரில் டிஸம்பர் ஜனவரி மாதங்களில் எல்லா வீடுகளிலும் அடிபடும் சம்பாஷணை இது. ஆனால், இவ்வாண்டு நடைபெற்றுவரும் காங்கிரஸ் கண்காட்சி இந்தக் குறைபாடுக்கு இடம் கொடுக்காமல், வர்த்தகப் பொருட்காட்சியாக மட்டும் இல்லாமல் அறிவுக் காட்சியாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

அரண்மனை போல் அலங்கரிக்கப்பட்ட கண்காட்சி வாயில் வழியே கண் காட்சி மைதானத்தில் உள்ளே நுழைந்ததுமே உலகம் சுற்றுவதைத்தான் காண்கிறோம். அந்த உலகத்திலே பளிச்சிடுகிறது “ஆல்விடோன்”. எக்ஸிபிஷனைச் சுற்றி வரத் தெம்பு வேண்டுமே! ஒரு கப் ஆல்விடோனை ருசித்துப் பருகிவிட்டுப் போகத்தான் தோன்றுகிறது.

வெகு தூரத்தில் வரும் போதே, “இங்குவாருங்கள்” என்று, வாஸனைத்





திரவிய உலகில் தங்களுக்கென ஒரு நிரந்தர ஸ்தானத்தைத் தேடிக் கொண்டு விட்ட டி. எஸ். ஆர். கம்பனி யாரின் ஸ்டால் நம்மை அழைக்கிறது. அதோ அந்த ஸ்டால் வாசலில் என்ன அப்படிப் பெண்களின் கூட்டம். ‘ஓகோ ஐடெக்ஸ் மகிமையா அது? சரிதான்!’

விஜயா கெமிகல்ஸின் ஸ்டால் சிறிதாக இருந்தாலும் அங்கு கூடிய கூட்டம் பெரிதாக இருந்தது. அவர்களது தயாரிப்புகளான பல அழகு சாதனங்களையும், கூடவே அவர்களது அழகிய காலண்டரையும் வாங்கிச் சென்றனர் பலர்.

இதென்ன இது, மதுரைக்கு வந்து விட்டோமா என்ன? இல்லை, மீனாட்சி கோயில் கோபுரம்போல் முகப்பை அமைத்த ஆர் எஸ். பதி அண்ட கம்பனியின் ஸ்டால்அது. பிரசித்தி பெற்ற அவர்கள் மருந்து புட்டி அந்தப் பக்கம் வந்தவர்கள் கையிலெல்லாம் இருந்தது.

பூர்ணிமா ஸில்க் ஹௌஸ் காசி விசுவ நாத அய்யர் எவர் ஸில்வர் பாத்திர ஸ்டால் இரண்டிலும் நல்ல கூட்டம். பெண்மணிகள்தான்; பல ரக மைசூர் ஸில்குகளை பிரமிப்புடன் பார்ப்பதிலும்,



வாங்குவதிலும் ஈடுபட்டிருந்தனர். எவர் ஸில்வரில் எது வேண்டும் என்பது போல அடுக்கு முதல் அண்டா வரை காசி விஸ்வநாத அய்யர் ஸ்டாலில் வைக்கப்பட்டிருந்தது.

சகல வலிகளையும் போக்கும் ஓரியண்டல் பாம் உயர்ந்து நின்று தன் பெருமையைத் தெருவித்துக் கொண்டிருந்தது. 1893 ஆண்டு முதல் ஆட்சி செலுத்தி வரும் அமிருதாஞ்சனம் ஸ்டால் தன் தயாரிப்புகளை அழகு படுத்தி வைத்திருந்தது.

"இவ்வளவு தூரம் சுற்றி வந்ததில் கொஞ்சம் டல் அடிக்கிறது, இல்லையா? இதோ நான் இருக்கிறேன் ப்ருக் பாண்ட் டீ" என அழைக்கிறான் "நான்தான் டீ" மனிதன்.

அவர்கள் அளிக்கும் பரிசுப் பொருள்களுக்கு மட்டுமல்லாமல், அதன் தரத்திற்காகவே சைபால் ஸ்டாலை நோக்கிப் பலரும் விரைந்து சென்றனர். ரத்தாட் டிரேடிங் கம்பனியாரின் வெஜிடபிள் ஹேர் ஆயில் மற்றும் அவர்கள் தயாரிப்புகளுக்கும் அங்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

மங்களகரமான மஞ்சள் உடையிலே ஊழியர்கள் மக்களை வரவேற்ற பி. வி. சாம்பார் பொடி ஸ்டால், பளிச்சென்று எல்லோர் பார்வையிலும் பட்டது. 'கோபடெக்ஸ்' ஸ்டாலில் நுழைந்து பார்த்த போது, கைத்தறியில் எவ்வள உயர்வான துணிகள் இருக்கின்றனவு என்ற உண்மை தெரிந்தது.

'சிற்றுண்டியும் உணவும் ருசிக்க நாங்கள்தான் உதவுகிறோம்' என்று சொல்



வது போல உணவு விடுதிக்கு அருகாமை யிலேயே அமைத்திருக்கிறார்கள் எல்.ஜி. பெருங் காயம் ஸ்டாலை.

இவ்வளவு பொருள்களையும் கொண்ட கண்காட்சி அறிவுக் கண் காட்சியாக அமைந் தது எப்படி என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? மத்திய மாகாண சர்க்கார்களின் ஒத்துழைப்புதான் அதற்கு உதவியது. ''மலரும் இந்தியா'' என்ற ஸ்டாலில் ஐந்தாண்டுத் திட் டங்கள் நிறைவேற்றியுள்ள, நிறைவேற்ற இருக் கும் சாதனங்களை ஜனங்கள் நன்கு புரிந்து கொள்ளும்படி விளக்கியிருக்கிறார்கள். 'நெய் வேலி திட்டம்' பற்றிய விளக்கமான படங் களும் குறிப்புகளும் சுவையாக இருக்கின்றன. மற்றும் சர்க்கார் நிர்வாகத்தின் ஏற்பாடன போலீஸ், கல்வி விவசாயம், போக்கு வரத்து கிராமநல இலாகாக்களின் சேவை குறித்து பொது மக்கள் நன்கு உணரும் முறையில் பல ஸ்டால்களில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.



எவ்வளவு தூரம் நம்நாட்டில் விஞ்ஞானம் முன்னேறி யிருக்கிறது என்பதற்கு 'டிரைவர் இல்லாமலே ஓடும் கார்' எடுத்துக் காட்டாக இருக்கிறது. கலைவாணரின் இறுதி யாத் திரையை நேரில் காணாத ரஸிகர்களின் குறை நீங்கவும் கண்காட்சியில் ஒரு ஸ்டால் இருக்கி றது. கண் மூடிக் கொண்டு ஒரு அணா கொடுத்து விட்டு, கண்களைத் திறந்து கொண்டு கொர்க்கலாம்.

இவ்வளவு தூரமும் சுற்றி விட்டுத் திரும்பும் போது கிளைப்புத் தீர, மீண்டும் ஒரு கப் ஆல் வடோனு'டன் விடை பெற்றுக் கொள்கிறோம்.



வாழ்க!

கணேசன்—சாவித்திரி

-: மா. சு. நாதன் :-



வெண்புரு ஜோடி வெண்திரை வானில்
புன்னகை பூத்துப் பாடுதல் கண்டு
தென்னக மெங்கும் தீஞ்சுவை யமுதைப்
பண்ணிசை யாலே பொழிந்திடல் பாரீர்

ஆந்திரம் தந்த அழகுடை யொருபுரு
தீந்தமிழ்த் திரையினில் பறந்தது ஜோராய்
காந்தக் கண்களில் கொஞ்சிடும் பார்வை
பூந்தமிழ்த் திரையில் பொழியுது புதுமை

2

பெண்புரு தானும் பெற்றது அழகு
கண்கள் மலரோ கனிவுறும் இதழோ
வதனம் நிலவோ வாடா மலரோ
இதனிற் கீடும் இல்லையே எனலாம்

தமிழகம் தந்ததிருவுரு ஒருபுரு
அமிழ்தினும் இனிதாம் அதனின் தோற்றம்
ஆண்புரு அதனின் அழகும் அகமும்
தேன்சுவை யூட்டும் தெவிட்டா அமுதாம்

3

படித்துப் பட்டம் பெற்ற தப்புரு
நடிக்கவும் கற்றது நற்றமிழ் பேசி
நொடிக்குள் நேயர் நெஞ்சை யள்ளி
நடிக்கும் திறனைப் பெற்றது திரையில்

காதல் ஜோடியாய்க் கதைகளில் வந்தே
பேத மின்றிப் பேருடன்ஒழுகி
நாதம் வீணை, நகம்சதை போன்றே
பூதலந் தனிலே புகழ்பல பெற்ற

4

கணேசன் சாவித்திரி சேர்ந்தனர் ஒன்றாய்
அநேகப் படங்கள் அற்புத மாயின
ஜோடிப் புறாக்கள் இணைந்தே புவியதில்
கூடி வாழவும் கொண்டன இல்லம்

ஆந்திர அழகு அற்புத மோகினி
தீந்தமிழ் அழகன் தினவுடை மோகனன்
கணேசன் சாவித்திரி கலையுல கதனில்
அநேக ஆண்டுகள் வாழ்க! வாழ்க!!

சிவாஜி கணேசன்
அளிக்கும்
பத்மினி
பிக்சர்ஸாரின்
வீரபாண்டிய
கட்டபொம்மன்
சரித்திரப் புகழ்பெற்ற
மகோன்னத காவியம்
முழு நீள
கேவா கலரில்,
தயாரிப்பு - டைரக்ஷன்
B.R.பந்துலு
கதை வசனம்:
சக்தி கிருஷ்ணசாமி
காமிரா: W.R.சுப்பாராவ்
சங்கீதம்: G.ராமனுதன்
ஸ்டுடியோ: பரணி
ஏப்ரல் வெளியீடு
ARUNA



"பிரஸிடெண்ட் பஞ்சாட்சர"த்தில் சரோஜா தேவி

வடநாட்டு நட்சத்திரமல்ல; படாதிபதி-டைரக்டர் கே. சுப்பிரமணியத்தின் மகள் எஸ். பத்மா. பரத நாட்டியத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற இவரது கச்சேரிகள் பல இடங்களிலும் நடந்து வருகின்றன.

S.L.Mani
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
T.S.R'S
டி.எஸ்.ஆர். & கோ

இது செய்தி

பாலா மூவீஸ்

"ஒன்றே குலம்" படத்தைத் தயாரித்த கிருஷ்ணசாமி பாலா மூவிஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியைத் தொடங்கி ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார். ஒரு வங்காளிக் கதையைத் தழுவி அமைக்கப்பட்டுள்ள இதன் திரைக்கதைக்கு கே. எஸ். கோபாலகிருஷ்ணன் வசனம் எழுதியிருக்கிறார். சங்கீத டைரக்ஷனை கே. வி. மகாதேவனும், டைரெக்ஷனை பீம்ஸிங்கும் கவனிப்பார்கள். வாஹினி ஸ்டுடியோவில் தயாராகவிருக்கும் இப்படத்தில் நடிக்கவென சிவாஜி கணேசன், ரங்காராவ், சௌகார் ஜானகி, ராகினி, கண்ணாம்பா ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

'புயலும் தென்றலும்'

சென்னை கணேஷ் கலைச் சங்கத்தினர் கடந்த மாதத்தில் "புயலும் தென்றலும்" நாடகத்தை நடித்தார்கள்.

கும்பகோணம் முனிசிபல் தலைவர் டாக்டர் வி. ஆர். மூர்த்தி முன்னிலையில் "நாடோடி மன்னன்" நூறுவது நாள் விழா தஞ்சையில் நடைபெற்றது.

நாடகத்தில் காலத்திற்கு ஏற்றபடி பல மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். வசனங்கள் நகைச்சுவையுடன் எழுதப்பட்டுள்ளன அனந்த சயனமாக நடித்த ஜி. கார்த்திகேயனது நடிப்பு சிறப்பாக இருந்ததெனினும் அவரது தோற்றத்திற்கு அவர் வயதான பாத்திரங்களில் நடிப்பது அவ்வளவு பொருத்தமல்ல என்றே பட்டது. கதாநாயகியாக நடித்த—நடிப்பா அது"—மல்லிகாவைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. நாடகத்திற்குப்பயிற்சிஅளித்த ஜி. கே. யின் திறமை பாராட்டும்படியாக இருந்தது.

அரங்கேற்றம்

குடந்தை பிரபல ஷராப்பு வியாபாரியும் மிதிலா மெட்டாலிக் இண்டஸ்டிரீஸ் உரிமையாளருமான திரு ஏ. ஆர். விஸ்வநாத செட்டியாரின் குமாரத்தி ஸ்ரீலதா, பேத்தி ஸுஜேதா ஆகியவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் அவர்கள் சொந்தத் தியேட்டராகிய ராஜா டாக்கீஸில் கடந்த மாதம் 14ம் தேதி

சிதம்பரம் எஸ். வி. கலியாணராமன் எம். எல். ஸி. முன்னிலையில் நடை பெற்றது. நாட்டியம் முடியும் வரையில் கூட்டம் தியேட்டர் கொள்ளாமல் இருந்ததே நாட்டியத்தின் உயர்வுக்குப் போதிய சான்று. இந்த இரு குமாரிகளும் டி. எஸ். சண்முகசுந்தரம் பிள்ளையிடம் சிட்சை பெற்றவர்கள்.

தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

பாரத் ஸ்டுடியோ, விளம்பர இலாகா மானேஜராகப் பணி புரியும் திரு பி. என். நாராயணசாமி, திருமதி என். சுப்புலட்சுமியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

வீகம்ஸி குடும்பம்

வீகம்ஸி நகை வியாபாரிகளின் தேநீர் உபசார விருந்து நான்காவது முறையாக கடந்த டிசம்பர் 16உ நடைபெற்றது. கோத்தாரி & சன்ஸ் பார்ட்னர் ஸ்ரீ டி. ஸி. கொத்தாரி பிரதான விருந்தினராக இருந்தார். அன்று மாலை நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி கொத்தாரி பரிசுகளை வழங்கினர்.

வாழ்த்துகிறோம்

நமது உசிலம்பட்டி ஏஜண்ட் திரு. டி. கே. ஜெயராமன், திருமதி சதிலீலாவதியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

நமது பத்திரிகை அச்சாகும் அச்சகத்தில் பணி புரியும் திரு எம். ஆர். புருஷோத்தமன், திருமதி சகுந்தலாவை இம்மாதம் 25ம தேதி

புதுமணத் தம்பதிகள் அனைவருக்கும் நமது "குண்டூசி"யின் வாழ்த்துக்கள்.

பண்டரியின் படம்

நடிகை பண்டரிபாய் ஒரு சமூகப் படத்தைத் தமிழில் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார். ஆரம்ப தின படப்பிடிப்பு பாரமௌண்டில் இம்மாதம் 14-ம் தேதி நடைபெற்றது. பாண்டுரங்கா புரொடக்ஷன்ஸின்

பிரபல உணவு பானமான ராகோடைன் ஏஜண்டு செல்வன் - என். காமாட்சி செல்வி கனகரத்தினத்தை சமீபத்தில் பொள்ளாச்சியில் சிறப்பாகத் திருமணம் செய்துகொண்டர்.



மூன்ருவது தயாரிப்பான இந்தப் படத்தின் திரைக்கதையை எச். எல். என். ஸின்ஹா எழுதியிருக்கிருர். வசனங்களை மா. ரா. எழுதுகிருர். பண்டரிபய், மைனுவதி, எஸ். என். லட்சுமி, எஸ். வி. சகஸ்ரநாமம் ஆகியோர் நடிக்கும் காட்சி ஒன்று முதல் நாள் படமாகியது. பாலாஜி, மனேகர், பாலய்யா, ராஜகோபால் ஆகப்பல நட்சத்திரங்கள் இப்படத்தில் நடிப்பார்கள் எனவும் தெரிகிறது.

பத்மாவின் அடுத்தது

"மனமுள்ள மறுதார"த்தைத் தயாரித்த பத்மா பில்ம்ஸார் தங்களது அடுத்த படத்தின் ஆரம்ப விழாவை பில்ம் சென்டரில் இம்மாதம் 20-ம் தேதி நடத்தினர்கள். அவர்களது இந்த இரண்டாவது தயாரிப்பின் கதை-வசனத்தை மா, ரா. எழுதியுள்ளார். டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் நடிக்கவென பண்டரிபாய் எஸ். வி. சகஸ்ரநாமம், டி. எஸ். பாலய்யா, ஆகியோர் ஒப்பந்தமாகியுள்ளனர். முதல் நாள் தாலாட்டுக் காட்சி ஒன்று படமாக்கப்பட்டது.

"கண்ணே பாப்பா, நல்லதே செய்"

சின்ன அண்ணுமலை "கண்ணே பாப்பா, நல்லதே செய்" என்ற பெயரில் குழந்தைகளுக்கான படம் ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்துவருகிருர். இந்தப் படத்தில் எம். ஜி. ராமசந்திரன் பிரதம பாகத்தில் நடிப்பதுடன், அதன் வளர்ச்சியிலும் அக்கறை காட்டுவார்.

"ராஜ கட்டளை"

மாடர்ன் தியேட்டர்ஸார் பிரம்மாண்டமான முறையில் "ராஜ கட்டளை" என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். பைபிளில் வரும் மோசஸ் என்ற வீரனின் கதையைத் தழுவி, திரைக் கதையை அமைத்து வசனங்களையும் எழுதவிருக்கிருர் மாறன் எம். ஏ., டி. ஆர். சுந்தரமே டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் தென்னக முன்னணி நட்சத்திரங்கள் பலர் நடிப்பார்கள்.

சங்கீத விழா

சிதம்பரத்தில் ஸ்ரீ பதஞ்சலி வியாக்ரபாத அனுக்ரஹ சங்கீத

நவீன ரக பட்டாடைகள்

உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த பட்டுச் சேலைகள், ஜார்ஜெட் கிரேப் சேலைகள்,

சோளி பீஸ்கள். சேலை அகலமுள்ள பாவாடைகள். வேஷ்டிகள் முதலிய பட்டு மற்றும் நூல் ஜவுளிகளுக்கு கீர்த்தி பெற்ற நாணயமான இடம்.

ராதா ஸில்க் எம்போரியம்
பெரிய தெரு, கும்பகோணம்

சபையின் பதினாறுவது ஆண்டுவிழா இம்மாதம் 16-ம் தேதி முதல் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. 18-ம் தேதியன்று, ஏவி. எம். ஸ்டூடியோ சங்கீத டைரக்டர் ஆர். சுதர்சனம் தலைமையில் சென்னையிலிருந்து ஏவி. எம். வாத்தியக் குழுவினர் சென்று சிறப்பாகக் கச்சேரி நடத்தினார்கள்.

"தங்கம் என் சம்சாரம்"

கவி பில்ம்ஸார் தங்களது முதல் தயாரிப்பான "தங்கம் என் சம்சாரம்" என்ற படத்திற்கான ஆரம்ப பூஜையை இம் மாதம் 24 ம் தேதி நடத்தினார்கள்.

கௌரவித்தனர்

பிரபல ஹோமியோபதி டாக்டரும், கும்பகோணம் முனிசிபல் கவுன்சில் தலைவருமான டாக்டர் வி. ஆர். மூர்த்தியை இம்மாதம் பதினாறும் தேதி மதுரை மக்கள் கௌரவித்து ஒரு வரவேற்பு அளித்தார்கள். மதுரையிலுள்ள பிரபல பிரமுகர்களெல்லாம் சேர்ந்து அளித்த கௌரவ வரவேற்பாகும் இது.

அறிமுகம் செய்வித்தார்

இம்மாதம் பதினாறும்தேதி, மவுண்ரோடிலுள்ள 'டீ' சென்டரில் ஒரு விசேஷக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார் டைரக்டர் கே. சுப்ரமண்யம். இக்கூட்டத்திற்கு பத்திரிகை நிருபர்களை அழைத்திருந்தார் அவர். அவர்களுக்கு டில்லி குழந்தைகள் பட சங்கக் காரியதரிசி மகேந்திரநாத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

மகத்தான நஷ்டம்

ஹாலிவுட்டின் பிரபல டைரக்டரும், தயாரிப்பாளருமான, சிஸில் பி. டிமில்லி, இம்மாதம் இருபத்தொன்றும் தேதி காலமானார். இது திரைப்பட உலகுக்கே மகத்தான நஷ்டம்.

நட்சத்திரத்துடன் ஒரு நாள் "சரோஜாதேவி"

இந்தப் பகுதிக்காக, மதுரையிலிருந்து வந்த சகோதரி ஜானகி அவர்களுடைய கடிதத்தை அப்படியே இங்கு தருகிறேன்; படித்துப்பாருங்கள்.

'' திரை உலகில் ஒரு வருஷத்திற்குள் யாருமே, இதுவரை அடைந்திராத புகழும், நட்சத்திரப் பதவியும் அடைந்து ராக்ஷஸ வேகத்துடன், இன்று பூத்துக் குலுங்கிவரும்,

கன்னடக் குயில் சரோஜா தேவியை ஏன் இதுரை இந்தப் பகுதியில் எங்களுக்கு அறிமுகப் படுத்தவில்லை. 1958ம் வருஷம், வெளிவந்த அவ

..தினத் தந்தியைப் படித்துவிட்டு...

...கடவுளை வணங்கி...

...மானேஜர் கிருஷ்ணமூர்த்தியுடன்...

...பரிசுப் பொருள்கள்...



ருடைய படங்கள் ஒவ்வொன்றும் 100வது நாள் விழாக் கொண்டாடி வெற்றியுடன் இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது. இவைகளில், 'நாடோடி மன்னன்' ,'சபாஷ் மீனு' இரண்டும் அவருடைய புகழை உயர்த்தி விட்டிருக்கின்றன.''

சகோதரி ஜானகி அவர்களுடைய கடிதம் தவிர, இ ந நூறுக்கு மேற்பட்ட கடிதங்கள், வந்திருக்கின்றன. நேயர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே கடமை யெனக் கொண்டுள்ள படியால், இந்த மாத இதழிற்காக, திருமதி சரோஜாதேவி அவர்களுடைய மானேஜர், கிருஷ்ண மூர்த்திக்கு, போன் செய்து விவரங்களைத் தெரிவித்து '' நாளைக் காலை, வருகிறோம், தயவு செய்து சரோஜா

...தாயார் ருத்ரம்மா, தந்தை பைரய்யா, சகோதரி முதலியோர்...



...ஹரிபாபு, கண்ணம்பாவுடன்...



...உதயபுரி இளவரசி ஹேமாதேவியாக உருமாறி...



..ராஜமுத்திரிகை செட்டில்..

அவர்களிடம் சொல்லிவைக்கவும்" என்றேன்.

"அவருக்கு நாளைக் காலையிலேயே படப்பிடிப்பு இருப்பதால், 6-30க்கே கிளம்பிவிடுவார்கள். சீக்கிரம் வந்துவிடுங்கள்" என்றார்.

மறுநாள் 6-15க்கே அடையார் காந்திநகர், இரண்டாவது மெயின் ரோட்டில் உள்ள அவருடைய 'புவனேஸ்வரி பவன' த்தை அடைந்தோம் அப்பொழுது அவர், ஈரத்தலையுடன் தலையில் துணியைச் சுற்றிக்கொண்டு பங்களாவின்

...மன்னன் (நாகேந்திர ராவ்) வில்லனாக மாற...

...தாயார் ருத்ரம்மா பரிவுடன் பறிமாற...





வெளிப்புறம் கோலம் போட்டுக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டவுடன், ''நமஸ்

...காரியதரிசி ஜயம்மா அபிமான நாய் கோபிக்கு மத்தியில்...

காரம், வாருங்கள், இன்று போகிப் பண்டிகையல்லவா? பொங்கல், புனிதமான தமிழ்ப் பண்டிகை அல்லவா? ஏன், ''ஆந்திராவிலும்,மைசூரிலும் சங்கராந்திப்பண்டிகை நாள் மிகுந்த விசேஷம்'' என்றார். கச்சிதமாய்,கோலத்தைப் போட்டு முடித்து விட்டு, உள்ளே சென்று, பூர்ண கும்பக் கலசமும், நடராஜா விக்ரகமும், ஸ்ரீராம பட்டாபிஷேகப் படமும்,

அக்காமகள் புவனேஸ்வரி...

உள்ள சிறிய பூஜை அறைக்குள் நுழைந்து, ஆண்டவனை வணங்கி விட்டு, வெளியில், வராந்தயில் உட்கார்ந்து அப்பொழுது வந்த தினத்தந்தி பத்திரிகையை சுவாரஸ்யமாகபடித்து முடித்துவிட்டு, தன்னுடைய மானேஜர் கிருஷ்ணமூர்த்தி

...வீனஸ் சுப்பிரமணியத்துடன் கால் ஷீட் பற்றி பேசி...



...வில்லன் வீரப்பா, மேக்கப் நாராயணசாமி பார்க்க ஜி.கே. ராமுவுக்கு வணக்கம்...

யுடன், அன்றய தினம் கவனிக்க வேண்டிய அலுவல்களைக் கலந்து பேசி, காலை சிற்றுண்டியையும் கவனித்துக் கொண்டு, வெளியில் வந்தார். அவருடைய டிரைவர் ராமச்சந்திரன், பிளைமத் காரை, பள பள வெனத் துடைத்து தயாராக வைத்

...படாதிபதி காஞ்சனம்மா, சுகுமாரியுடன்...

..."கல்யாணப் பரிசு" ஸெட்டில்

தில் உள்ள பிரபல, மேக்கப் நிபுணர் ஹரி பாபு வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

அங்கு அது சமயம், ஹரிபாபு அவர்கள், கண்ணம்பாவுக்கு மேக்கப் செய்து கொண்டிருந்தார். அரைமணி நேரத்திற்குப் பிறகு மேக்கப் அறையிலிருந்து உதயபுரி இளவரசி ஹேமா தேவியாக வெளியில் வந்தார். ஹரிபாபுவுக்கு வணக்கம் செலுத்திவிட்டு நேராக பாரமவுண்டு ஸ்டுடியோவிற்கு வந்து சேர்ந்தார்.

... ராகினிக்கு விடை கொடுத்து...

திருந்தார். தாயார் ருத்ரம்மா, தந்தை பைரய்யா, மானேஜர் முதலியவர்கள் வழி அனுப்ப கார் மாம்பலத்

பிரபல நடிகர், டைரெக்டர், நாகேந்திர ராவ் தயாரித்து வரும், கன்னடத் தயாரிப்பான

இருவரும் பக்கத்து பக்கத்து அறையில் தங்குகிறார்கள். அரசன் வில்லனாக மாறுகிறான். பலாத்கார முறையில் நெருங்குகிறான். இதுதான் அவர் நடிக்க வேண்டிய கட்டம். டைரக்டர்

தாயார் திருஷ்டி
கழித்து திலகம்
இடுகிறார்.

''ராஜ முத்திரிகை'' என்ற படத்தில் அன்று தன்னுடைய பாகத்தில் உள்ள வசனங்கள் முதலியவைகளை டைரக்டர் நாகேந்திர ராவிடமும், உதவி டைரக்டர் நாராயண், புரொடக்ஷன் மானேஜர் சிம்ஹா, இவர்களுடனும் கலந்து தயாராக்கிக் கொண்டார்.

இளவரசி ஹேமா தேவி வந்து தங்கவேண்டிய சத்திரத்தில், ஏற்கெனவே பக்கத்து தேச அரசன் தங்கி இருக்கிறார். (அரசன் தான் நாகேந்திரராவ்)



...சைக்கிள்
சவாரி...

...வீட்டிலேயே
பீச்சு...

'சபாஷ் சரோஜா' என்று சொல்லும் படி அவ்வளவு இயற்கையாக அதிக டேக் இல்லாமல், நடித்து முடித்து விட்டு பகல் 1-30 மணிக்கு சாப்பாட்டிற்காக வீட்டிற்குப் புறப்பட்டார். தாயார் ருத்ரம்மா அவர்கள் அன்புடன் அன்னம் பறிமாற தந்தை, ஸெக்ரடரி, அதாவது தன்னுடைய மாமன் மகள், ஜயம்மாவுடனும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, பங்களாவின் வெளிப்புறத்தில், தன் தமக்கை கமலம்மா, காரியதரிசி ஜயம்மா தந்தை இவர்களுடன் தமாஷாகப் பேசிக்கொண்டே வெற்றிலை போட்டுக்கொண்டு, சற்று பொழுது போக்கினர். பிறகு தன் தமக்கை கமலம்மாவின் பெண் பேபி புவனேஸ்வரியுடன் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்து விட்டு, மறுபடியும் 2-30 மணிக்கு ஸ்டூடியோவிற்கு வந்து சேர்ந்தார்.

காலை நடந்ததன் தொடர்ச்சிதான். கதாநாயகனாக, நாகேந்திரராவின் மகன் சுதர்சன் நடிக்கிறார். வில்லன் பலாத்காரத்திலிருந்து தப்பி தன்னுடைய காவலாளியுடன் சத்திரத்திலிருந்து வெளியேறி வருகிறாள் இளவரசி ஹேமலதா தேவி. மேலும் அவர் சம்பந்தப்பட்ட சில்லரைக் காட்சிகளும் படமாக்கப்பட்டன,

வீனஸ் பிக்சர்ஸ் புரொடக்ஷன் மானேஜர் சுப்பிரமணியம் அவர்கள் வந்து அவர்கள் தயாரித்து வரும் "கல்யாணப் பரிசு" பட சம்மந்தமான ஷூட்டிங்குக்கு கால்ஷீட் விஷயமாய் சரோஜா தேவியுடன் பேசிக்கொண்டிருந்தார்.

வேலையை முடித்துக்கொண்டு 6-30 மணிக்கு மேக்கப் கலைப்பதற்காக, ஸ்டூடியோவில் மேக்கப் அறைக்குள் நுழைந்தார். அங்கு வீரப்பா அவர்களுக்கு, நாராயணசாமி மேக்கப் செய்து கொண்டிருந்தார். அவருடன் பேசிக்கொண்டிருந்த சமயம் 'நாடோடி மன்னனை' உருவாக்கிய காமிராமேன், ஸ்ரீ ஜி. கே. ராமு அவர்கள் வந்தார். பக்தியுடன் அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, வெளியில் வரும் சமயம், படாதிபதி, காஞ்சனம்மா, தான் தயரித்துவரும்' படத்தில், நடித்து வரும், சுகுமாரியுடன் வந்தார். அவருடன் சற்று நேரம் ஹாஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார். பிறகு, என்னைப் பார்த்து, "ஸார்; வாஹினிக்குப் போய்விட்டுப் போகலாமா" என்றார். "ஏன் அங்கு ஏதாவது ஷூட்டிங் உண்டா?" என்றேன். "இன்றைய என் வேலை இத்துடன் முடிந்தது விட்டது. அங்கு பத்மினி இருக்கிறார். பப்பியிடம் எனக்கு அலாதியான அன்பும் பக்தியும் உண்டு அவரைப் பார்த்து விட்டு வீட்டிற்குப் போய் விடலாம்" என்றார்.

"ஆணாக நடிக்க பெண்ணைத் தேடுகிறீர்களே! இதோ நான் இல்லையா?" ஆர்.ஏ. பிக்சர்ஸ் "பண்ணையார் மகனி"ல் மாஸ்டர் விஜயகுமார்.

கார் வாஹினி ஸ்டுடியோவிற்குள் வந்தது அங்கு மதுரம் பிக்சர் ஸார் தயாரித்து வரும் "மீண்ட சொர்க்கம்" படத்தில் பத்மினி நடித்துக்கொண்டிருந்தார். ஜெமினி கணேசன், ராகினி, வீனஸ் பிக்சர்ஸ் கிருஷ்ணமுர்த்தி டைரெக்டர் ஸ்ரீதர், இவர்களுடன் சிறிது நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். ராகினிக்கு ஷூட்டிங் முடிந்து விட்டதால் அவருடன் வெளியில் வந்து அவரை வழியனுப்பி விட்டு, இரவு 8-30 மணிக்கு நேராக வீடு வந்து சேர்ந்தோம்.

செல்ல மகள் சரோஜாவின் வருகைக்காக கையில் ஹாரத்தியுடன் காத்திருந்தார், அவரது தாயார். கற்பூரம் ஏற்றி திருஷ்ட்டி கழித்து நெற்றியில் திலகமிட்டு மகளை உள்ளே அழைத்துக் கொண்டார். உடைகளை மாற்றிக் கொண்டு வெளி

இதென்னடி ஆச்சரியம்! படம் முடியறதுக்குள்ள இன்னும் என்னென்ன மாறுதல் ஏற்படப் போகிறதோ?—
"குறவஞ்சி"யில் மைனவதி.

யில் வந்து "ஸார், எனக்கு நன்றாக சைக்கிள்விடத் தெரியும்" என்றார். "நான் நம்ப முடியாது ஓட்டிக் காட்டினால்தான்" என்றேன். அவ்வளவுதான், "ஐயம்மா." என்று சத்தம் போட்டார். காரியதரிசி ஐயம்மா சைகிலுடன் வந்து நின்றார் சைகிளை வாங்கிக்கொண்டு ஒரு 'ஜம்ப்' செய்து ஏறிக் கொண்டு வீதியில் புறப்பட்டு விட்டார். 10 நிமிஷங்கள் கழித்துத்தான் வந்தார். "எங்கு போய் வந்தீர்கள்"? என்றேன்.

"டைரெக்டர் சுப்பிரமணியம் சார் வீடுவரை போய் வந்தேன். அவர் மகள் பத்மா, என்னுடைய பெஸ்ட் பிரண்டு. இருவருமாகத்தான் சைக்கிள்விடுவோம். அவரைத்தான் பார்க்கப்போனேன். அவள் வெளியில் போயிருக்கிருள். ஸார் கூட இல்லை. சுப்ரமணியம் ஸார் குடும்பத்தினிடம் எனக்குப் பெரும் மதிப்பு உண்டு" என்று பெருமையுடன் சொன்னார்.

"காலை 5 மணியிலிருந்து சளைக்காமல் தெம்பாகவே சுற்றி வருகிறீர்களே, கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் புறப்படுகிறோம். நான் கூடவே வந்து உங்களுடன் நாள்பூராவும் சுற்றிக்கொண்டு வந்தது உங்களுக்கும் கொஞ்சம் தொந்தரவாக இருந்திருக்கும்" என்றேன். "கிடையாது சார், எனக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறது. இரவில் நாம் பீச்சுக்கு போய் எல்லோருமாகப் பேசிக்கொண்டிருப்போம். எங்கள் பீச்சை நீங்கள் பார்த்ததில்லையே" என்றார்.

எனக்குத் திகைப்பாக இருந்தது. பங்களாவிற்கு வெளிப்புறத்தில் விசாலமாக உள்ள இடத்தில் மணலைக் கொட்டி சுற்றிலும் செடிகள் வைத்திருந்தது. அங்கு பெரிய விரிப்புகளைப் போட்டுவிட்டு அங்கு அவர்கள் குடும்பம் பூராவும் டிரைவர் உள்பட நிம்மதியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது வழக்கமாம். உள்ளே ரேடியோ கிராம் போட்டு விடுவார்கள். பாட்டைக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். "இந்த இடத்தில்உள்ள செடிகளில் நிறைய முள்ளங்கிச் செடியாகவே இருக்கிறதே" என்றேன் அவர் தாயாரிடம்.

"முள்ளங்கி என்றால் சரோஜாவிற்கு அவ்வளவு பிரியம்" என்றார். இதைக்கேட்ட சரோஜா ஓடிப்போய் ஒரு முள்ளங்கிச் செடியைப் பிடுங்கி எடுத்து அலம்பிவிட்டு வாயில் கடித்துக்கொண்டே அவர்கள் வீட்டு பீச்சில் படுத்துக்கொண்டார்.

"கல்யாணத்திற்கு நீங்கள் கண்டிப்பாக வந்துவிடவேண்டும்" என்றார் அவரது தாயார். 'சரோஜாவிற்கா?' என்றேன். "இல்லை, சரோஜாவின் தங்கைக்குத்தான். பத்திரிகை அனுப்புகிறேன். கண்டிப்பாய் வந்து சேரவேண்டும்" என்றார். மங்களகரமான சேதியுடன் விடைபெற்றுக் கொண்டு வீடுவந்து சேர்ந்தேன்.

வாழ்த்தும் வந்தனமும்

நாள்கடந்து தெரிவிப்பது நன்றி விஷயத்தில் தவறில்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எமக்கு பொங்கல் வாழ்த்துகள் அனுப்பிய படாதிபதிகள், நட்சத்திரங்கள் மற்றும் பட உலகப் பிரமுகர்கள், வாசகர்கள், ஏஜண்ட் தோழர்கள், விளம்பரதாரர்கள், விளம்பர ஆலோசக ஸ்தாபனத்தார் ஆகியோர் அனைவருக்கும் எங்களது உளமார்ந்த நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களது இன்றைய மகோன்னத வளர்ச்சிக்கு ரசிகர்களின் அன்பும் ஆதரவுமே காரணம் என்பதை நம் தென்னக நட்சத்திரங்கள் என்றுமே மறந்தவர்களல்ல; அவர்களால் உங்கள் அன்பை ஆதரவை மறக்கவோ மறுக்கவோ முடியாது. அவர்களில் பலரும் தங்கள் அபிமானப் பத்திரிகையான "குண்டூசி"யின் மூலம் இதோ உங்களுக்குத் தங்கள் வணக்கத்தையும, பொங்கல் வாழ்த்தையும் வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

"தை பிறந்துவிட்டது வழி பிறக்கும்" என்ற நம்பிக்கை, ஆண்டி முதல் அரசன்வரை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலவிவருகிறது. இந்த நேரத்திலே "**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக**" என அனைவருக்கும் வாழ்த்துக் கூறி "குண்டூசி"யின் பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டு ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தையும் கூற விரும்புகிறோம்.

"**குண்டூசி** குறித்த காலத்தில் வருவது இல்லை" என்ற குறை பலருக்கும் இருக்கிறது. நேயர்களின் இந்தக் குறையை நீக்கி "குண்டூசி" யைப் பிரதி மாதமும் முதல் தேதியே கொண்டு வருவதற்கான முயற்சிகள் முடிவடைந்து வருகின்றன என்ற உறுதியையும் வெளியிடுகிறோம்.

வந்தனம். —**ஆசிரியர்**

ஆல்விடோன்
சோம்பல் நீக்கி சுகமளிப்பது. எல்லா விடமின்களும் அடங்கியது. விருந்துக்கு இனிமை தருவது. இது ஒரு தேசிய பானம்.
ALVITONE
(ALL VITAMINS IN ONE)
An Ideal Food Beverage
A drinking food containing concentrates from Almond, Barleymalt, full cream milk and Cocoa. Being prepared under hygienic conditions the nutritory and Vitamin value of the constituents are well preserved. Alvitone is a delicious beverage free from drugs.
TONE UP YOUR SYSTEM WITH ALVITONE
1LB
ALVITONE LABORATORIES MADRAS 16
CHARI
ALVITONE LABORATORIES, MADRAS - 16.

பாண்டித்தேவன் பிறந்த கதை

“பாபு”

படாதிபதி — டைரெக்டர் கே. சுப்பிரமணியம்



ஒரு திரைப்படம் உருவாவதற்கு எவ்வளவு வகையான கலைஞர்கள் தங்கள் திறனையும் உழைப்பையும் அதில் செலுத்தவேண்டியிருக்கிறது என்பதை எல்லோரும் தற்போது அறிந்திருக்கிறார்கள். என்றாலும், பலருக்கு தனித்தனியே அந்த ஒவ்வொரு கலைஞரின் வேலையும் எவ்வளவு முக்யத்துவம் வாய்ந்தது என்பது சரியாகப் புரிவதில்லை.

மனித உடலின் வலிமை, அழகு இவை இரண்டும் நன்றாக இருக்க வேண்டுமானால் உடலின் பல்வேறு நரம்புகளும், எலும்புகளும், எண்ணற்ற மயிரிழை போன்ற ரத்தக் குழாய்களும் எவ்விதம் சரிவர வேலை செய்ய வேண்டுமோ அது போல், ஒரு திரைப்படம் தயாரிக்கும் போது அதன் பல்வேறு துறை நிபுணர்களும், மற்றும் ஏனைய உதவியாளர்களும், தங்கள் தங்கள் பொறுப்புகளை நன்கு உணர்ந்து தங்கள் திறனை வெளிப்படுத்தினால் தான் ஒரு சிறந்த படம் உருவாக முடியும். படத் தயாரிப்பில் கதை அம்சம் என்பது இதயத்தைப் போன்றது. டைரெக்டரோ மூளையின் இடத்தில் இருப்பவர்.

டைரெக்டர் கே. சுப்ரமண்யம் பாண்டித்தேவன் திரைக்கதையை எழுதி முடித்தார். இந்தத் திரைக்கதை, தலைப்பு முதல் ‘வணக்கம்’ என்ற முற்றுப்புள்ளி வரையில் உள்ள ஒவ்வொரு சம்பவமும், அங்கு ஒவ்வொரு பாத்திரத்தின் வசனத்தின் கருத்து முக்கிய

மான ஒளிப்பதிவுக் கோணங்கள் இவை யாவும் கொண்டது அறுநூறு பக்கங்கள் டைப் செய்யப் பட்ட ஒரு நூல். இதன் அடிப்படையில் வசன கர்த்தா வசனங்களை எழுதினர். ஆரம்பம் முதல் முடிவு வரை இதை டைரெக்டர், அவருடைய உத வியாளர்கள், வசனகர்த்தா ஆகியோர் பன்முறை படித்து பலநாட்கள் இலக்கிய விமர்சனம் செய்த பிறகு, கூடியவரை குறைகளைத் தவிர்த்து திரைக் கதை வசனம் முடிவுசெய்த பதிப்பு எழுதி முடிக் கப்பட்டது.

இதன் பிறகுதான் வந்தது கதா பாத்திரங் களுக்கு ஏற்ற நடிகர் நடிகையர்களாக யார்யாரை எந்த எந்த வேடங்களில் போடலாம் என்ற பிரச்னை. கூடவே எந்த எந்த கலை நிபுணர்களை ஒப்பந்தம் செய்யலாம் என்பதும் ஆலோசிக்கப்பட் டது. கதை அம்சத்திற்கு ஏற்ப மற்ற யாவரும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

மொராக்—ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் கூட்டுத் தயா ரிப்பான "பாணடித் தேவனில்" தென்னகத்தில் இயற்கை அன்னை அள்ளித் தெளித்திருக்கும் அழகு நிறைந்த சோலை களும், மலைப் பாதை களும், ஆற்றங்கரைக ளும், உப்பங்கழித் தோணி ஓட்டங்களும், மனிதன் தன் வாழ்க் கையை வளமாக்கிக் கொள்வதற்காக எழுப் பிக் கொண்டிருக்கும் அணைக்கட்டுகளும், மக் கள் கண்ணுக்கும் கருத் துக்கும் விருந்தளிக்க போகின்றன. அவகைள் சிறந்த முறையில் பட மாக்கப் படுவதற்காக, பல கார்கள், லாரிகள் இவைகளில் சுமார் அறு பத்தைந்து நடிக நடிகையர், உபநடிகர்கள், நுண் கலைத்துறை தலைவர்கள், உதவியாளர்கள் ஆகி யோர் சென்னையிலிருந்து போயிருந்தோம். முப் பத்து மூன்று நாட்கள் பிரயாணம் செய்து, தமிழ் நாடு, கேரளம் கர்நாடகம் ஆகிய பகுதிகளில் பல காட்சிகளை அவர்கள் பட மெடுத்துக் கொண்டு

வி. ராமாராவ்
ஆர்ட் டைரெக்டர்

மேலிருந்து கீழ்:

வி. பாலகிருஷ்ணன் பி·ஏ., பி.எல். (மொராக் மானேஜிங் டைரெக்டர்), **டி. கே. வெங்கட் ராமன் பி. எஸ்ஸி.** (டெக்னிகல் டைரெக்டர்), **வி. ராஜகோபால் பி. ஏ.** (ஒளிப்பதிவாளர்), **ஸி. என். பாண்டுரங்கம்** (சங்கீத டைரெக்டர்).

வந்தார்கள். இதற்கு நான்கு காமிராக்கள், ட்ராலி முதலிய சாதனங்களுடன் ஒரு க்ரேனும் எடுத்துச் செல்லப்பட்டது

இரு புறமும் அடர்ந்த அழகிய தென்னந் தோப்புகள் நிறைந்த ஆற்றிலே பல வைக்கோல் படகுகள் செல்லுகின்றன. பி எஸ். சரோஜா, ராஜசுலோசன, டி. பி. முத்துலட்சுமி ஆகியோர் ஒரு படகை ஓட்டிக் கொண்டு ஓடப் பாட்டுப் பாடு கின்றனர். படத்தில் நீங்கள் காணப் போகும் ஒரு காட்சி இது.

இக் காட்சியில் சுமார் எழுபது படகுகள் இதற் குப் பயன் படுத்தப்பட்டன. பிறகு, இந்த ஓடங் களில் உள்ள வைக்கோலுக்கு சிலர் தீ வைத்து விடுகிறார்கள். பல ஓடங்கள் தீப்பிடித்து எரிகின் றன. இப்படி ஒரு காட்சி படத்தில் வருகிறது. இதைப் படமெடுக்கும் போது முன்ஜாக்கிரதை யோடு நடந்து கொண்டோம். முதல் உதவி சாத னங்களுடன், டாக்டர்கள் வரவழைக்கப் பட்டபின் உண்மையாகவே சில ஓடங்களை எரித்து அக்காட் சியைத் தத்ரூபமாகப் படமாக்கினோம்.

தண்டாயுதபாணி பிள்ளை
நடன டைரெக்டர்.

மலை மீது வந்து கொண்டிருக்கும் வெடி மருந்து நிறைந்த லாரி ஒன்று விபத்துக்குள்ளாகி பள்ளத்தாக்கிலே உருளுகிறது. இப்படி ஒரு சம்பவம் கதையில் வருகிறது. இக் காட்சிக்காக உண்மையான லாரி ஒன்று மலை உச்சியிலிருந்து தள்ளி விடப்பட்டது. இதை காமிராக்கள் பல கோணங்களிலிருந்தும் படமாக்கின. இந்தக் காட்சியை படமாக்கப் போவதை அறிந்து சுற்றுப்புறத்தில் உள்ள கிராம மக்கள் அனைவரும் பல மைல்களிலிருந்து திரண்டு வந்து இதை வேடிக்கை பார்த்தார்கள். லாரி உருண்டதும், ஒரே கைத்தட்டலும் கூச்சலும் வானைப் பிளந்தன.

மற்றொரு இடத்தில் பியட் கார் ஒன்று மலைப்பிர தேசத்தில் போகும் போது ஒரு லாரியில் மோதி

மேலிருந்து கீழ்:

எஸ். ஸ்ரீனிவாஸன் (ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் மானேஜிங் பார்ட்னர்) முகவை. ராஜமாணிக்கம் (வசனகர்த்தா) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் (பாடலாசிரியரில் ஒருவர்). முத்துக் கூத்தன் (பாடலாசிரியரில் மற்றொருவர்).

காரின் வலதுபுறம் நொறுங்கிற்று. டிரைவருக்கும் மற்றொருவருக்கும் பலத்த காயம். ஆனால் இது படத்தில் வரும் காட்சி அல்ல. படப்பிடிப்புக்காக சென்னையிலிருந்து சென்ற பல கார்களில் ஒரு காருக்கு ஏற்பட்ட உண்மையான விபத்து. இங்கு தமாஷான சம்பவம் ஒன்று நடந்தது. நடக்கும் படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க, இவ்விபத்து நடந்த இடத்திற்கு அருகேபல மக்கள் குழுமியிருந்தார்கள். ஆனால் அங்கு கூடியிருந்தவர்களில் யாருமே அடிபட்டவர்களுக்கு உதவி செய்ய முன் வரவில்லை. ஏன் தெரியுமா? அவ்விபத்தும் படப்பிடிப்புக்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு காட்சி என்றும், யாருக்கும் உண்மையில் காயம் படவில்லை என்றுமே எல்லோரும் நம்பினார்கள். குறுக்கே வந்தால் படப்பிடிப்புக்குத் தடையாக இருக்கும் என்ற நல்ல எண்ணத்துடனேயே யாரும் வரவில்லை. படப்பிடிப்பு நடந்த இடத்திலிருந்து எல்லோரும் ஓடிச் சென்று விபத்துக்கு உள்ளானவர்களைக் கவனித்தோம். இது மூனாரில் ஏற்பட்ட அனுபவம்.

பப்பன்
உதவி டைரெக்டர்

மூனாரில் மக்களின் அன்புகலந்த ஒத்துழைப்பு படப்பிடிப்புக்கு மிக உதவியாக இருந்ததையும நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நாள் முழுதும் உழைக்கும் இப்படப் பிடிப்பில் பங்கு கொண்ட அனைவருக்கும், உற்சாகம் அளிக்கவும், தங்கள் அன்பை வெளிப்படுத்தவும், மூனார் வியாபாரிகள் சங்கம், கல்லார்குட்டி அதிகாரிகள் சங்கம் முதலிய பல ஸ்தாபனங்களும், கிராம மக்களும், தனி வரவேற்பும், விருந்து உபசாரங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தினார்கள்.

டைரக்டர், மற்றும் முக்கியபாத்திரமேற்று நடிக்கும் நடிக நடிகையர் முதல், சிறு தொழிலாளி வரை அனைவரும் ஒத்துழைக்கவில்லையானால் இதைச் சாதித்திருக்க முடியாது. காலை ஐந்து மணி முதல் அனைவரும் சுறுசுறுப்பாக தங்கள் வேலையிலிறங்கி மாலை சூரியன் மங்கும் வரை படப்பிடிப்பு நடக்கும்.

ஒரு இடத்திலே, தூரதரிசினியில் டைரக்டருக்கு ஒரு அழகான பிரதேசம் தென்பட்டது. அது சாலையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள இடம். திரைக்கதையின் ஒரு சம்பவத்திற்கு தன் கற்பனைக் கேற்ற இடம் அதுவே என டைரெக்டர் நினைத்தும் ஒரு மைல் எப்படி எல்லோரும் நடந்து செல்

எஸ். வி. ரமணன் பி.காம்
உதவி டைரெக்டர்

ஸி. பி. ஜம்புலிங்கம்
எடிட்டிங்



எஸ்.கே. நதன சபாபதி
எடிட்டிங்

வது என யோசித்தார். ஆனால் யாரும் நடக்கத் தயங்கவில்லை. உற்சாகத்தோடு கதாநாயகன் கதாநாயகி உட்பட அனைவரும் காமிரா முதலியவற்றைத் தூக்கிக்கொண்டு மலைச்சாரலில் நடந்து சென்றார்கள். படப்பிடிப்பும் அங்கு திருப்திகரமாக முடிந்தது.

கே. பாலன்
புரொடக்ஷன் மானேஜர்

மற்றொரு இடத்திலும் இதுபோல பாதையில்லை. ஆனால் அங்கு எப்படியும் க்ரேன் உள்ள லாரியைக் கொண்டு வந்துவிடவேண்டுமென்று எண்ணவே, பல துறைத் தலைவர்கள் உட்பட அனைவரும் பாதையிடும் பணியில் இறங்கினார்கள். நூறு கூலியாட்களும் நியமிக்கப்பட்டார்கள். இரவெல்லாம் வேலை நடந்து மறுநாள் மூன்று பர்லாங் பாதை தயாராயிற்று. க்ரேனும் அவ்விடத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

இவ்வனைத்தும் பல தொழில் நுட்பத் துறைத் தலைவர்களும், உதவியாளர்களும் தந்த மாபெரும் ஒத்துழைப்பினால் தான் சாதிக்க முடிந்தது.

சுருங்கக் கூறினால், இந்த வெளிப்புறக் காட்சிகளுக்கான பிரயாணம் ஒரு உல்லாசப் பிரயாணத்தின் ஆனந்தத்தையும், இருண்ட காட்டின் நடுவே கொடிய விலங்குகளுக்கிடையே சென்று ஆற்றிய செயல்கள் கடினமான வேலையை ஒருலக்ஷியத்திற்காகச் சரிவர முடித்தோம் என்ற பெருமிதத்தையும் ஒருங்கே அளித்தது.

பொருள் வசதியோடு, லட்சியங்கள் கொண்ட ஒரு தொழிலாளர் கூட்டத்தின் ஒத்துழைப்பும், திரைப்படத் தயாரிப்புக்கு ஒரு மூலதனமாகும். இங்கு மொராக் படஸ்தாபனத்தின் முக்கிய மூலதனமான ஒத்துழைப்பை அளித்து உதவிய திரையில் தோன்றாத கலைஞர்களை அறிமுகப்படுத்த எனக்கு ஒரு வாய்ப்பு அளித்த 'குண்டூசி''க்கு, எங்கள் நன்றி.

'பட உலக ஜாம்பவானை' டைரெக்டர் கே. சுப்பிரமணியத்தின் சிறந்த டைரெக்ஷனில் உருப் பெற்றுள்ளது மொராக்-ஸ்ரீனிவாஸ் பில்ம்ஸ் கூட்டுத் தயாரிப்பான "பாண்டித் தேவன்" ராகினி, ராஜசுலோசனா, பி. எஸ். சரோஜா, டி. கே. பாலசந்தர், டி. பீ. முத்துலட்சுமி, அசோகன், சுந்தர், டி. கே. பகவதி, சந்திரபாபு ஆகப் பலர் நடித்து வரும் படம் இது.

எம். கோபால்
மேக்கப்மேன்

டி. எஸ். அய்யலு
உடைகள்

சதாசிவ ராவ்
ஸ்டில்ஸ் உதவியாளர்

ஸ்தாபிதம் 1920

தந்தி: நஸ்யம்
மதருஸ்

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

எங்களிடம் பித்தளை, தாமிர வில்லைகளும், இதர உலோகத் தகடுகளும், பித்தளைக் கம்பிகளும் மலிவான விலைக்குக் கிடைக்கும்.

பெ. சா. நா. சா.

அம்பலவாண செட்டியார் அண்டு கோ.

(பிரைவேட்) லிமிடெட்.

(உரிமையாளர். ஸ்ரீராம் ரோலிங் மில்ஸ்)

14, தங்கசாலைத் தெரு, சென்னை - 3.

தந்தி:— பிராக்கோமெட்டல்.

டெலிபோன்:— ஆபீஸ் 55106 தொழிற்சாலை 61104.

இத்துடன் இணைக்கப்பட்ட ஸ்தாபனம்:

பெ. சா. நா. சா. அம்பலவாண செட்டியார்.

மட்டாஞ்சேரி, கொச்சி.

இல்லறமே நல்லறம்

வி. சீனிவாசன்

"அந்த நாள்" கோயம்புத்தூரில் "ஜமீன்தார்" "திவான்பகதூர்" "சபாபதி" என்பவர் இருந்தார். அவர் பெரிய மில் "முதலாளி"யாகவும் விளங்கினர். அவர் "மனைவி" "குணசுந்தரி" மிகவும் நல்லவள். தன் "கணவனே கண்கண்ட தெய்வம்" என்றும், "அன்பே தெய்வம்" என்றும், "பதிபக்தி"யுடன், "மணாளனே மங்கையின் பாக்கியம்" என்றும் சதா மனதில் நினைத்துக்கொண்டு "தெய்வ நீதி"க்கும் "பராசக்தி"க்கும் கட்டுப்பட்டு தன் "வாழ்க்கை"யை நடத்திச் சென்ருள். இவர்களுக்கு "கண்ணின் மணிகள்" போல் இரண்டு பிள்ளைகள் உண்டு. அவர்களில் பெரியவன் "மோகன சுந்தரம்", இளையவன் "தேவதாஸ்". இந்த இரண்டு "உத்தமபுத்திரன்"களைப்பெற்ற அந்த "மக்களைப் பெற்ற மகராசி" "பெண்" குலத்திற்கே "மாதர் குல மாணிக்க"மாக விளங்கினள். கற்பில் "கண்ணகி"யாய் தர்ம சிந்தனையில் "தர்ம தேவதை"யாய் விளங்கினள்.

திவான் பகதூருக்கு அந்தரங்கக் காரியதரிசியாகவும் நண்பனுக்கு "நண்பன்" போலவும் விளங்கினன் "ரத்னகுமார்". இவன்மேல் "நன்னம்பிக்கை' உண்டு அந்த ஜமீன்தாருக்கு. ஆனல் "அவன்", தான் "லட்சாதிபதி"யாகவேண்டும் என்ற "ஆசை" கொண்டான். இதற்காக பஞ்சமா பாதகத்தையும் செய்யத் துணிந்தவன இந்த கள்ள எண்ணம் கொண்ட ரத்னகுமார். இவன் "காதல்" "ராணி" தான் "சிங்காரி". இந்த "மாயக்காரி"யிடம் அறிமுகம் செய்துவைத்தான் மோகனசுந்தரத்தை. இவனும் ரத்னகுமாரை நல்லவன் என்று எண்ணினன். இவன் "மணமாலை" சூட்டி, "மாங்கல்யம்" கட்டிய இவன் "பத்தினித் தெய்வம்" சிறந்த "அழகி" பெயர் "தேவகி." ஆனல் "படித்த பெண்" அல்ல. கிராமத்துப் பெண். தாலி கட்டிய மனைவிக்கு துரோகம் செய்வதை நினைக்கவே இல்லை. இந்த சிங்காரி தன் மோக வலையை வீசி "பாச வலை" என அதை எடுத்துக் காட்டி மோகன சுந்தரத்தின் மேல் காதல் கொண்டு இருப்பதாகப் போலி "அன்பு" காட்டினள். ஆனல் இதை அறியாத இவன் "பிரேம பாசம்" தன்மேல் கொண்டிருக்கிருள் என நினைத்தான். ரத்னகுமார் தேவகியின் மீது ஒரு கண்ணாகத்தான் இருந்தான். பலமுறை ஜாடையாகப் பேசியிருக்கிருன் "கற்புக்கரசி"யாக இருக்கும் அந்த "மங்கையர்க்கரசி"யிடம்.



"பார்த்திபன் கனவு" படப்பிடிப்புக்கு வந்த பாலாஜி, ஜெமினி கணேசனுக்கு மேக்கப்பைச் சரி செய்கிருர்.

மாதுங்கா, ஸ்ரீ கலைவாணி நிருத்ய மந்திரில், எஸ். மூர்த்தியிடம் சிட்சை பெற்ற குமாரிகள் ஜகதாம்பாள், சாயினி தேவி இருவரின் பரத நாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் நடந்தது.

ஆனல் மோகன வெறியை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவதாஸ் தன் "அம்மா"விடம் காட்டும் அன்பைவிட தன் "அண்ணி" யிடம் அதிக அன்பாகவே இருந்தான். தன் தமையன் தவருன பாதையில் செல்வதைக் கேள்விப்பட்ட தம்பி, தன் தமயன் திருந்துவதற்காக தன் தந்தையிடம் சொல்லி, தமயனை விசாரிக்கச் சொன்னன். அவரும் தன் மகனைக் கூப்பிட்டு, "நான் பெற்ற செல்வம்" நீ, ஆகையால் பாதை தவறிப் போவதாகக் கேள்விப்பட்டேன். நீ "திருமணம்" செய்து கொண்டவன். அந்த "இல்லற ஜோதி"யை "குடும்பவிளக்கு"ப் போல், "குலதெய்வம்" போல் விளங்கும் நீ "மாலையிட்ட மங்கை"யை, "ரத்தக் கண்ணீர்" வடிக்கச் செய்கிருயே "வீட்டுக்கு வந்த வரலக்ஷ்மி"யை.

அந்தப் "பெண் மனம்" எவ்வளவு கலங்கியிருக்கும். அப்போதும் அந்தக் கலவரத்தைக் காட்டிக்கொள்ளவில்லை, அந்த "பாக்யவதி." "தாய்க்குப் பின் தாரம்" என்பது தெரியாதா உனக்கு. உன் அக்கறையில் தாயை அடுத்து கவனிக்க வேண்டியவள் உன் மனைவி தானே! உன்னை நினைத்து உன் தாய் கலங்குகிருள். அந்த "தாய் உள்ளம்" படும் வேதனை உனக்குத் தெரியுமா? நம் "குடும்ப கௌரவம்" "பணம்" அந்தஸ்து இவைகளை எல்லாம் மறந்துவிட்டு இப்படி நடக்கலாமா? நீ "என் மகன்" என்று "உலகம்" சொல்லும்படி நடந்துகொள். எனச் சில புத்திமதிகளைக் கூறினர். இதை அவன் காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. இதற்குக் காரணம் தன் தம்பிதான் என்று அறிந்த பெரியவன் இவனும் "நல்லதம்பியா" நமக்கு என்று எண்ணினன்.

தம்பியைக் கூப்பிட்டு தந்தையின் எதிரிலேயே சண்டித்தான். வாதம் முற்ற "ரத்தபாசம்" இருவருக்கும் முறிந்துவிட்டது. ஜமீன்தார் இருவரையும் சமாதானம் செய்தார். இந்த ரத்னகுமாரிடம் ஒரு "ஏழை உழவன்" பெயர், "வளையாபதி" கடன்பட்டிருந்தான். கடனைத் திருப்பித் தரமுடியாத நிலையில் இருந்தான் வளையாபதி. ஆனல், அதற்கு பதிலாக அந்த "ஏழையின் ஆஸ்தி"யான அவன் "குமாரி"யான "பொன்னி"யை "மணமகளா"கத் தரும்படி கேட்டான். மறுத்தான். அதற்காக அவன் கலங்கவில்லை. 'பலநாட்கள் அவகாசம் தருகிறேன் யோசனை செய்து முடிவுக்கு வா' என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிருன் பெரியவன்.

கவலையால் அந்த ஜமீன்தார் சொத்துக்களைப் பிரித்துவிட்டு அவரும் உலகத்தைவிட்டுப் பிரிந்துவிட்டார். "அமரதீபம்" ஆகிவிட்டார். அதுமுதல் தனியாக "குடும்பம்" நடத்த தன் "சம்சாரம்"ஆக இருக்கும். அந்த "மங்கையர் திலக"மாக விளங்கும் அந்த "சௌபாக்கியவதி"யை "மங்கள கௌரி"யை உடன் அழைத்துச் செல்லும்போது அவனை "பெற்றதாய்" வந்து தடுத்து, நம் வீட்டு "மருமகள்" வாயும் வயிறுமாக எட்டு மாத கர்ப்பிணியை அழைத்துச் செல்கிருயே, இது நியாயமா என்று புத்திமதிகள் கூறியதையும் கேளாமல் தனியே சென்றுவிடுகிருன். தம்பியின்மேல் கொண்டுள்ள வெறுப்பால் தனியே சென்று இருக்கிருன். தன் "மாமியா"ராக இருக்கும் அவர்களைப் பிரிய நேரிடுகிறதே என்று அவள் "கண்

கள்" கலங்கின. அப்போது தேவதாஸ் மில்லின் பொறுப்பை கவனித்துவிட்டு வரும்போது ஒரு பாழடைந்த "பெரிய கோவில்" முன் பொன்னி தற்கொலை செய்துகொள்ளும்போது "சமய சஞ்சீவி"யாகச் சென்று காப்பாற்றுகிறான். அவள் கதையை யெல்லாம் தெரிந்துகொள்ளுகிறான். தன் மில்லில் வேலை செய்யும் "வேலைக்காரன்" மகள் என்று அறிகிறான். அவள் அழகில் தன் மனதைப் பறிகொடுக்கிறான். அதற்கு "ஐயா இந்த "ஏழை படும் பாடு" உங்களுக்குத் தெரியுமா? என்னை ஏன் காப்பாற்றினீர்கள்" என்று கேட்கிறாள்.

அதற்கு தேவதாஸ் உனக்கு 'சம்மதம் இருந்தால் "நாம்" மணமும் மலரும் போல் இருக்கலாம். உனக்கு "புது வாழ்வு" அளிப்பேன். உன் "மனம் போல மாங்கல்யம்" நடக்கும். "கோகில வாணி" அருளால் "புதையல்" போல் எனக்குக் கிடைத்தாய். நான் தேடாமலே "தேடிவந்த செல்வம்" ஆகிவிட்டாய். உனக்கு "வைரமாலை"யும், பொன்னும் மணியும் நிறைய கிடைக்கும். "சுகம் எங்கே" என்று தேடி அலைந்த "வாழ்விலே ஒருநாள்" இந்த நாள் தானோ என்னவோ?

"நல்ல இடத்து சம்மந்தம்" என்று என் தாயும் ஒப்புக்கொள்வார்கள். நீ என்ன சொல்கிறாய்?

"என் தந்தை"யும் ஒப்புக்ஒள்வார் எங்கள் வீட்டு "மாப்பிள்ளையாக" வருவதற்கு. "உலகம் பலவிதம்". இதை அறியாதவரா நீங்கள்? நம் மாசில்லா நட்பை உலகம் தவறாக எண்ணினால், அதுவும் உங்களுக்கும் எனக்கும் ஒத்து வருமா? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் எனறு சொன்னாள்.

உலகம் எதைச் சொன்னாலும் சொல்லட்டும் "எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி" யாக வருவதற்கு "பணக்காரி" "வேலைக்காரி" பிச்சைக்காரி" என்ற பேதத்தைப் பற்றிக் கவலை யில்லை. என் "மருமக"ளாக வருவதற்குப் பண்பும், அன்பும் இருந்தால் அதுவே போதும் என்று சொல்வாள் என் தாய் அடிக்கடி. கதைகளில் கேட்டிருக்கிறோமே, "லைலா-மஜ்னு" "அனார்க்கலி" "அம்பிகாபதி" "அமராவதி" "ஆர்யமாலா" "காத்தவராயன்" இவர்கள் காதலை உலகம் ஏற்

காததினல் மடிந்து போனூர்கள். ஆனல் நம் வாழ்க்கை அப்படி முடியாது. உன்னைத் திருமணம் செய்து கொண்ட பிறகு நீ ஒரு ''பிள்ளைக் கனியமுது'' பெற்றுத்தந்து அதைக் கையால் எடுத்துக் கொஞ்சவேண்டும் என்ற ஆசை எனக்கு! என்ன சொல்கிருய் என்று கேட்டான் தேவதாஸ்.

அதற்கு சம்மதம் கொடுக்கிருள் அந்த ''மின்னல் கொடி''யாள். சரி இப்போது வீட்டுக்குப் போ. நாளை ரத்னகுமாருக்குக் கொடுக்க வேண்டிய பணததுடன் தாயோடு வந்து சந்திக்கிறேன் என்று சொல்லிவிட்டுச் செல்கிருன் அவன்.

தன் தாயிடம் விஷயத்தைச் சொல்கிருன். தாயும் சம்மதிககிருள். பெரியவன் கதையைச் சொல்கிருள் தன் இரண்டாவது மகனிடம். இதைக் கேட்ட அவன் மிகவும் வேதனைப் படுகிருன். முறைப்படி அண்ணனைத் திருமணத்திற்கு அழைக்கச் செல்கிருன்; ''அன்னையின் ஆணை''ப்படி. வர மறுக்கிருன் பெரியவன். அவன் மனைவியையும் அனுப்பவில்லை. தேவதாஸின் திருமணம் நடக்கிறது சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரத்ன குமார் ''வஞ்சம்'' தீர்க்க எண்ணினன். தேவகிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ''கல்யாணி'' என்ற பெயரும் வைத்தார்கள். பெரியவன் சொத்து பூராவும் கறைந்தது. மில்லையும் அடமானம் வைத்து பணத்தைச் செலவழித்து நாசமாக்குகிருன். அந்த சிங்காரிக்கு மோகனசுந்தரம் "தூக்குத் தூக்கி"யாக இருந்தான்.

அவள் இட்டதுதான் சட்டம், ''ஓர் இரவு'' மோகன சுந்தரத்தையும், சிங்காரியையும், 'டவுன்பஸ்ஸி''ல் ஏற்றி ''நாடோடி மன்னன்'' சினிமாப் பார்க்க அனுப்பி விட்டான். தன் திட்டப்படி தேவகியைக்கொண்டுவந்து தன் வீட்டில் தன் காம இச்சையைத் தீர்த்துக் கொண்டு மோகனசுந்தரத்தை விட்டு விட்டு சிங்காரியுடன் வெளியூர் சென்று விடவேண்டும் என்ற எண்ணப்படி தேவகியைத் தூக்கி வந்து அவளிடம் கொஞ்ச ஆரம்பித்தான். ''மோகினி''! உன் அழகை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. ''பூலோக ரம்பை'' எனச் சொல்லுவார்களே அழகில் சிறந்தவளே! அந்த ரமபை நீ தானே? ''ரம்பையின் காதல்'' எனக்குக்கிடைக்காதா'' என்று அவளை நெருங்கினன். அதற்கு அவள் ''நான் மணமானவள். ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டேன். என்னை விட்டுவிடுங்கள்'' என்று அந்தக் கயவனிடம் கெஞ்சுகிருள். இதை அவன் கேட்க வில்லை. கற்பழிக்க நெருங்குகிருன். அப்பொழுது அவ்வழியே வந்த தேவதாஸ் தன் அண்ணியின் குரல் கேட்பதைக் கேட்டு ஜன்னல் வழியே பார்க்கிருன். தன் அண்ணியின் மானத்தைக் காக்க, அண்ணியை அழிக்கும் அக்கயவனைத் தீர்த்துக்கட்ட உள்ளே சென்று சண்டை போடுகிருன்.

சினிமாவுக்குச் சென்ற இடத்தில் சினிமாத் தியேட்டரில் நடந்த கலவரத்தினல் சற்று தடைப்பட்டது. அதனல் வீடு திரும்பும்போது ரத்ன குமாரும், தேவதாஸும் சண்டை போடுவதன் காரணத்தை தன் மனைவி மூலம் கேள்வி பட்ட மோகனசுந்தரம் ஆத்திரம் அடைகிருன். தன்னை வஞ்சித்த ரத்ன குமாரை உதைக்கிருன். ''இவள் தான் இந்த 'கள்வனின் காதலி.' மகனே! நீ நல்லவகைத் திருந்தியது கடவுள் அருளும் உன் மனைவியான, ''பெண்ணின் பெருமை'' யான அவள் கொடுத்துவைத்த "மாங்கல்ய பாக்கிய"வதி ''பாவை பிடித்த பாக்கியசாலி'' யான அந்த தேவகிதான் காரணம்'' என்று தாய் சொல்லுகிருள். தேவகிதன் மைத்துனர் மனைவியை கட்டியணைத்தவாறு, ''உன் திருமணத்திற்கு நான் வரவில்லையே என்று வருந்தாதே. இனிமேல் நீ ''என் தஙகை'', 'நாம் இருவர்' இப்போது ''இரு சகோதரிகள்'' ஆகிவிட்டோம். என்னை மன்னித்து விடு என்று கூறுகிருர்கள். கணவன் காலில் விழுந்து இது "நம் குழந்தை" என்று கணவன் கையில் கொடுக்கிருள். அக்குழந்தையைத் தன் தாயின் கையில் கொடுக்கிருன். மோகனசுந்தரம் தம்பியைக் கட்டிக்கொண்டு 'இனி "ஆசை அண்ணா அருமைத் தம்பி"யாக இருப்போம்' என்று உறுதிமொழி கூறுகிருன்.

அன்றுதான் அக்குடும்பம் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது. 'பொன்னி! உன் தந்தையையும் இங்கு அழைத்துவந்து விடு' எனக் கூறிகிருள் கற்பில் "சதி அனுசயா"வாக விளங்கும் 'குணசுந்தரி.'

பெருமைப்பட வேண்டிய செய்தி



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அழகு சாதனங்கள் மேல்நாடுகளில் வெகுவாகப் பாராட்டப்படுகின்றன என்றால் அது தமிழனே பெருமைப்படவேண்டிய நற்செய்தி.

இங்கிலாந்திலிருந்து பிரசுரமாகும் "சோப்ஸ், பெர்பியூமரீஸ் & காஸ்மெடிக்ஸ்" என்ற பத்திரிகை வாசனை உலகிலே தனி ஆட்சி புரியும், கும்பகோணம் டி. எஸ். ஆர். கம்பெனியின் தயாரிப்பான "ஸான்டால்" "ஸான்டல் வுட்" முகப் பவுடர்களை வெகுவாகப் புகழ்ந்து எழுதியுள்ளது. அதை அப்படியே இங்கு பிரசுரிப்பதில் பெருமிதமடைகிறோம்.

மேல்நாட்டுப் பெண்மணிகள் டி. எஸ். ஆர். கம்பெனியின் தயாரிப்புகளின் அபூர்வ குணங்களை மிகவும் பாராட்டி உபயோகிக்கிறார்கள்.

T.S.R. of Kumbakonam

Last year we had the pleasure of receiving trial samples of their Sandalwood Face Powder from T.S.R. & Company, manufacturing perfumers, of Post Box 24, Kumbakonam, South India. As a result of our comments, the trial formula has been slightly revised. The sandalwood used in this powder is now effectively micronised, at which fine particle size it becomes smooth, adherent and very pleasant to touch.

We illustrate below T.S.R. & Company's new Face Powder and Talcum Powder, both based on this finely divided sandalwood. The perfuming of the products has been ably accomplished, with the result that the sandalwood-rose odour is well rounded and very persistent. Further details may be had direct from the makers.

Packaging for Men

A new luxury range of men's toilet preparations was introduced in July by Cyclax of London, under the style of

குலதெய்வம் ராஜகோபால் யானை மீது பவனி வருவது ''நாலுவேலி நில''த்தில்.

அவள் யார்

படத்தின் தலைப்பிலிருந்து அனைத்திலுமே ரஸிகர்கள் ஒரு புதுமையைக் காணப்போகின்றனர் "அவள் யார்" படத்தில். ஜெமினியின் பல தரமான படங்களுக்குப் பொறுப்பாளியாக இருந்த கே. ஜே. மகாதேவனின் சுதர்சனம் பிக்சர்ஸின் இப்படம், கோல்டன் ஸ்டுடியோவில் மளமளவென வளர்ந்து வருகிறது.

படத்தின் வசனங்களை வே. லட்சுமணன் எழுதியிருக்கிறார். சங்கீத டைரெக்ஷனை ராஜேஸ்வரராவும், ஒளிப்பதிவை ராமமூர்த்தியும் கவனித்து வருகின்றனர். சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி, பண்டரிபாய், சந்தியா, வி. கோபாலகிருஷ்ணன், சந்திரபாபு, எஸ். வி. ரங்காராவ், ஜி பட்டு அய்யர் ஆகப் பலர் இப்படத்தில் நடித்து வருகின்றனர். எட்டாயிரம் அடிகளுக்கு மேல் இப்படம் வளர்ந்துவிட்டது.

அறிவாளி

ரூபாயில் எழுபத்தைந்து நயா பைசா பாகம் உருப்பெற்றுவிட்டது "அறிவாளி." ஏ. டி. கே புரொடக்ஷன்ஸின் தயாரிப்பாகும் இந்த சமூகப் படம். படத்தின் டைரெக்டரும் தயாரிப்பாளருமான ஏ. டி. கிருஷ்ணசுவாமியே திரைக்கதையை அமைத்திருக்கிறார். மருதகாசியும்-பாபநாசம் சிவனும் எழுதியுள்ள படத்தின் பாட்டுகளுக்கு எஸ். வி. வெங்கட்ராமன் இசை அமைத்திருக்கிறார். வாஹினி-விஜயா ஸ்டுடியோக்களில் தயாராகி வருகிறது இப்படம். சிவாஜி கணேசன், டி. எஸ். பாலய்யா, கே. சாரங்கபாணி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், பானுமதி ஆகப் பல நட்சத்திரங்கள் நடிக்கும் இப்படத்தில் மற்றும் டி. பி. முத்துலட்சுமி, எம். சரோஜா, ராமதாஸ ஆகியோரும் நடித்து வருகின்றனர். சாயி—சுப்புலட்சுமியின் கவர்ச்சிமிக்க நடனமும் இப் படத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. இப்படத்தின் பூரண உரிமைகளையும் ஸ்ரீ பாபு பில்ம்ஸார் பெற்றுள்ளனர்.

தர்ம பத்தினி

சிவகுமார் பில்ம்ஸார் பூரண உரிமை பெற்றுள்ள "தர்மபத்தினி" ஆர். எஸ். ஆர். மூவிடோனின் தயாரிப்பாகும். பில்ம் செண்டரில் உருப் பெற்று வரும் இப்படத்தின் வசனங்களை 'கலைமணி' எழுதியுள்ளார். சௌகார் ஜானகி, ஜமுனா, மனோகர் எஸ். வி. சகஸ்ரநாமம், பாலய்யா, நம்பியார், நாகய்யா, டி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களாக நடித்துவருகின்றனர். இப்படத்தின் சங்கீத டைரெக்ஷனையும், டைரெக்ஷனையும் முறையே வேதாவும், வி. கிருஷ்ணனும் கவனித்து வருகின்றனர்.

பொங்கல்
வெளியீடு..
ஜனவரி
10
முதல்
JUPITER PICTURES LIMITED
ஜூபிடரின்
தங்கப் பதுமை
டைரக்ஷன்: A.S.A.சாமி
கதை-வசனம்: அரு.ராமநாதன் இசை: விஸ்வநாதன் & ராமமூர்த்தி • ஒளிப்பதிவு: ராமசாமி.
RIGHTS CONTROLLED BY: ராதா கிருஷ்ணு பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்
ஆலப்புழை ......மதராஸ்
ஸ்டுடியோ... நெப்டியூன்

புனர்ஜன்மம்

சிவாஜி கணேசன், பத்மினி காதல் ஜோடியாக நடித்துவரும் பல படங்களில் ஒன்று "புனர்ஜன்மம்." விஜயா பிலிம்ஸின் இந்தத் தயாரிப்பை ஆர். எஸ். மணி டைரெக்ட் செய்து வருகிறார். இதன் திரைக் கதையை அமைத்து வசனத்தை எழுதியுள்ளார் ஸ்ரீதர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களை எழுதியுள்ளார். டி. சலபதிராவ் சங்கீத டைரெக்ஷனை கவனித்து வருகிறார். இப்படத்தின் தயாரிப்பாளர் என் எஸ். திரவியம். தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், புளிமூட்டை ராமசாமி, சாயிராம், கண்ணாம்பா, ராகினி, சுந்தரிபாய் ஆகப் பலர் இப்படத்தில் நடித்து வருகின்றனர்.

மின்னல் வீரன்

பாரமௌண்ட் ஸ்டுடியோவில் ஜரூராகத் தயாராகிவரும படங்களில் "மின்னல் வீரனு"ம் ஒன்றாகும். இது டி. என். ஆர். புரொடக்ஷன்ஸின் தயாரிப்பாகும். படத்தில் கதாநாயகனாக ரஞ்சனும், பி. எஸ். வீரப்பா வில்லனாகவும் நடிக்கின்றனர். சந்தியாவும வனஜாவும் படத்தின் பிரதம நடிகைகள். கல்யாணராமனின் தயாரிப்பான இப்படத்தை ஜம்பனா டைரெக்ட் செய்துவருகிறார்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

'உலகிலே உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு எதுவும் இல்லை' என்ற வள்ளுவரின் கருத்தை அடைப்படையாகக்கொண்டு, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" படத்தின் கதையை அமைத்து வசனத்தை எழுதியிருக்கிறார் எஸ். அய்யாப்பிள்ளை. தயாரிப்பாளர் ஸி. ஹொன்னப்ப பாகவதரின் மேற்பார்வையிலே இப் படம் பாரமவுண்ட் ஸ்டுடியோவில் அதி விரைவாகத்

அச்சடிப்பதற்கும் இதர உபயோகங்களுக்கும் ஏற்ற எல்லாவிதமான அட்டைகள், காலிகோ, நியூஸ் பிரின்ட், ஆர்ட் பேப்பர், கிராப்ட் பேப்பர் முதலியவைகள் எம்மிடம் எப்போதும் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்

★

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

2/34, தங்கசாலை வீதி, சென்னை - 3.

டெலிபோன்: 55000

தயாராகி வருகிறது. இப்படத்தின் டைரெக்‌ஷனை எம. ஏ. திருமுகமும், சங்கீத டைரெக்‌ஷனை கே. வி. மகாதேவனும் கவனித்து வருகின்றனர். பிரேமநஸீர், வி. ஆர். ராஜகோபால் முத்துராமன், ஏ. கருணாநிதி, ஈ. வி. சரோஜா, எம். என். ராஜம், கண்ணாம்பா ஆகியோர் படத்தின் முக்கிய நடிகர் - நடிகைகள்.

பொன் விளையும் பூமி

இதுவரை நடித்திராத ஒரு புது மாதிரியான கதாபாத்திரமாக ஜெமினி கணேசன் "பொன் விளையும் பூமி"யில் நடிக்கிறார். மூக்கில் வளையமும், பரட்டைத் தலையுமாக அசல் பட்டிக்காட்டானாக நடிக்கும் அவருக்கு இப் படத்தில் பத்மினி ஜோடியாக நடித்து வருகிறார். ஓரியண்டல் மூவிஸின் இந்தத் தயாரிப்பில் மற்றும பாலய்யா, எஸ். வி. சுப்பையா, சந்திரபாபு, ராகினி ஆகியோரும் நடித்துவருகின்றனர். இப் படத்தின் வசனத்தை அரங்கண்ணல் எழுதியிருக்கிறார். ஏ. பீம்ஸிங் டைரெக்‌ஷனில பரணி ஸ்டுடியோவில் அதி விரைவாகத் தயாராகி வரும் இந்தப் படத்தின் பூரண உரிமைகளையும் எஸ். கே. பிக்சர்ஸார் பெற்றுள்ளனர்.

பண்ணையார் மகன்

டி. ஆர். மகாலிங்கமும் ராகினியும் முதலமுறை காதல் ஜோடியாக நடிக்கும் படமாகும் நியூ ஏஞ்சல் புரொடக்‌ஷன்ஸ் அளிக்கும் "பண்ணையார் மகன்." இப் படத்தின் வசனங்களை ஏ. எல். நாராயணன் எழுதி யிருக்கிறார். ஆர். ஏ. பிக்சர்ஸின் தயாரிப்பான இப் படத்தில் மற்றும் வி. ஆர். ராஜகோபால், டி. கே. ராமச்சந்திரன், வி. எஸ். ராகவன், பத்மினி பிரியதர்ஸினி, சுந்தரிபாய், பேபி மாலதி ஆகியோரும் நடித்து வருகின்றனர். ஜி. ராமநாதனும ஜம்பனாவும் முறையே சங்கீத டைரெக்‌ஷனையும், டைரெக்‌ஷனையும் கவனித்து வருகின்றனர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

கனகராஜ் — ராமகிருஷ்ணன் ஆகிய இருவரது கூட்டுத தயாரிப்பாக உருவாகி வருகிறது "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" படம். இப் படத்தின் கதை வசனத்தை துறையூர் கே. மூர்த்தி எழுதி யிருக்கிறார். ரங்கா பிக்சர்ஸ் அளிக்கும் இப்படத்தில் கொடூரமனம் படைத்த ஜமீன்தாராக எம். ஆர். ராதா நடிக்கிறார். தந்தைக்கு நேர்மாறான குணாதிசயங்களைக் கொண்ட மகனாக பிரேம்நஸீரும், அவன் காதலுக்குப் பாத்திரமான மங்கையாக ஈ வி. சரோஜாவும் நடிக்கின்றனர். மற்றும் மாலினி, முத்துராமன் ஆகியோரும் நடித்து வரும் இப் படத்தை ராமண்ணா டைரெக்ட் செய்து வருகிறார்.

விதியின் விளையாட்டு

ஸ்ரீ ஜெகன்மாதா பில்ம்ஸாரது "விதியின் விளையாட்டு" சோல்டன் ஸ்டுடியோவில் பெரும் பகுதி படமாகி விட்டது. இப் படத்தின் வசனத்தை ஏ. எல். நாராயணனும், நீலக்கண்ணனும் கூட்டாக எழுதியுள்ளனர் டைரெக்‌ஷனையும் சங்கீத டைரெக்‌ஷனையும் முறையே பி. எல். சந்தோஷியும், டி. சலபதிராவும் பொறுப்பேற்று கவனித்து வருகின்றனர். இப் படத்தில் மனோகருக்கு ஜோடியாக பண்டரிபாயும், பாலாஜிக்கு ஜோடியாக விஜயகுமாரியும நடித்து வருகின்றனர். மற்றும் 'குலதெய்வம்' ராஜகோபால், கே. சாரங்கபாணி, ஸி. கே. சரஸ்வதி, அங்கமுத்து, எஸ். ஆர் ஜானகி ஆகியோருடன் தயாரிப்பாளர் எம். எம. டி. ராஜனும் இந்தப்படத்தில் முக்கிய பாத்திரம் ஒன்றில நடித்து வருகிறார்.

வண்ணக் கிளி

மனேகரும் பிரேம் நஸீரும் சேர்ந்து நடிக்கும் படமாகும் மாடர்ன் தியேட்டர்ஸின் "வண்ணக் கிளி". இந்தக் கண்ணகி (புராணக் கண்ணகி அல்ல!) பேத்தியின் கதை வசனத்தை ரா. வெங்கடாசலம் எழுதியுள்ளார். டி. ஆர். ரகுநாத்தின் டைரெக்ஷனில் வளரும் இந்த சமூகப் படத்தில் பி. எஸ். சரோஜா, மைனவதி, முத்துலட்சுமி, டி. பாலசுப்பிரமணியம்; டி. ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர். மாடர்ன் தியேட்டர்ஸில் இப்பொழுது இப்பட்த்தின் உருவக வேலைகள் தான் ஜரூராக நடைபெற்று வருகின்றன.

விஜயபுரி வீரன்

முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் வில்லன் நடிகர் அசோகன் "விஜயபுரி வீரன்" படத்தின் மூலம் மிக உன்னத ஸ்தானத்தை அடைவார் என்பது திண்ணம். அவ்வளவு உயர்வாக நடித்திருக்கிறார் இந்த படத்தில். டி. கே. எஸ். நாடக கோஷ்டியில் நடித்துள்ள ஹேமலதா என்ற நடிகையை முதன் முறையாக பிரதம பாகத்தில் நடிக்கவைத்திருக்கும் தயாரிப்பாளர் மற்றும் பல புது முகங்களை இந்தப்

எதிர்ப் பக்கம்:

"ராகினி" இப்படி உல்லாஸமாக இருப்பது "பாண்டித் தேவனி"ல்.

படத்தின் முக்கிய பாத்திரங்களில் அறிமுகப் படுத்தும் துணிச்சலையும் செய்திருக்கிறார்.

ஜோஸப் தளியத் டைரெக்ஷனில் முற்றுப் பெற்று வரும் இப் படத்தின் வசனத்தை டி என். ராஜப்பா எழுதி யிருக்கிறார்.



கன்னடத்துப் பொன்னும், கேரளத்து மணியும் சேர்ந்தால் "மரகதம்" ஒளிர் விடுவதில் ஆச்சரியம் என்ன?

பக்ஷிராஜாவின் தயாரிப்பான "மரகத"த்தில் பத்மினியும்— சந்தியாவும்.

சுதர்சனம்

பொங்கல் வாழ்த்துக்கள்

அவள் யார்

தயாரிப்பு
& டைரக்ஷன்

K.J. மகாதேவன்

பிக்சர்ஸ்

ஏ.எஸ். மேனன்

அவள்
யார்

அவள்
யார்


அவள்
யார்

அவள்
யார்

நடனம் ஆடினார்

"பரணி"

சென்றமாதம் இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பைன் ஆர்ட்ஸ் 11வது நாட்டியகலா மகாநாட்டில் ஸ்ரீமதி மிருணாளினி சாராபாயின் "தர்பணா நாட்டியக் குழுவின்" கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீமதி மிருணாளினி சாராபாயின் ஜதி அமைப்புகள், தாளக் கச்சிதம் எல்லாம சர்வ சுத்தம். கச்சேரியைப் பார்க்கையில் நாம் எங்கிருக்கிறோம் என்பதையே அனுபவபூர்வமாக மறந்துவிடுகிறோம். பரத நாட்டியத்தில் ஜதிகளின் அமைப்பு, ஆடும் விதம், முகஹஸ்தபாவாபிநயங்கள், ஆடை ஆபரணங்கள், பக்கவாத்திய அமைப்பு இவைகளில் இன்றைக்கு ஸ்ரீமதி மிருணாளினிதான் சிறந்த வழிகாட்டியாக இருக்கிறார். தந்நிகரற்ற ஒரு சிறந்த "நாட்டிய நிபுணர்" என்று சொல்வதைத் தவிர வேறு வர்ணிப்பு அவசியமில்லை. அன்றைக்கு அவர் பிடித்த பந்துவராளி தானவர்ணம் வெகுப் பிரமாதம். அவருடன் ஆடிய மற்ற இரு



குமாரி சசிகலா

ஜனவரி 14 முதல்
கெயிட்டி . காமதேனு
பாரத்..
மற்றும் தென்னுடெங்கும்
MAV PICTURES SALEM
எம்.ஏ.வி.பிக்சர்ஸ்
மாதவி
டைரக்ஷன்
கிருஷ்ண ராவ்
கதை
வேங்கட ராமானுஜம்
பாடல்கள்
கா.மு.ஷெரீப்
ஸ்டுடியோ: ரத்னா. சேலம்.
BHARAT
STUDIO

குமாரிகள் ஸ்ரீலதாவும் – ஸுஜேதாவும்

பெண்களும், குஜராத்திகள் என்பது தெரியாதபடி, பண்பட்ட தமிழ்ப் பெண்கள் போல் கச்சிதமாக ஆடினார்கள். இறுதியில் சுமார் ஒரு மணி நேரம் ஆடிய கீத கோவிந்த நாட்டியம் தனிச் சிறப்புடன் இருந்தது. தெய்விக கிருஷ்ணனை, தனது பக்தி மேலீட்டால் மானிட உருவில் மேடையில் கொண்டு வராமலேயே, தேஜோமூர்த்தியாக பாவித்த விதம்ஒரு புதுமை.

ஆர். விஜயலட்சுமி.

இவ் வருஷ சீஸனில் இதுதான் தலைசிறந்த கச்சேரி. இன்றைக்குப் பலர் பரதநாட்டியம் ஆடினாலும், சரியானபடி சாஸ்திரீய சம்பிரதாயப்படி ஆடுபவர்களில் முதன்மையானவர் மிருணாளினி சாராபாய் தான். நாட்டியம் ஆடுபவர்களும், ஆட்டுவிப்பவர்களும இவருடைய நாட்டியத்தை நிச்சயம பார்க்கவேண்டும். ஸ்ரீமதி மிருணாளினியின் கச்சேரி அடிக்கடி தமிழ் நாட்டில் நடைபெற வேண்டும். இன்றைய பரதக்கலையின் மறுமலர்ச்சிக்கு இது மிகவும் அவசியமானது

ஸ்ரீமதி மிருணாளினி சாராபாய் பாரத நாட்டின் கலைச் செல்வம்; அவரே ஒரு சர்வகலாசாலை; பரதக் கலையின் பெருமைப் பொக்கிஷம்.

அடையார் ஆர்ட்ஸ் அகாடமியில் குமாரி சசிகலா, குமாரி விஜயலக்ஷ்மி இவ்விருவரின் பரதநாட்டியக் கச்சேரி, சென்ற மாதம் நடைபெற்றது. நல்ல நாட்டிய அனுபவமுள்ள குமாரி சசிகலாவின் அன்றைய நாட்டியம் நன்றாக ரஸிக்கும்படி யிருந்தது. கர்னாடகமான ஜதிகளை நல்ல விறுவிறுப்புடன் ஆடினார். கை பாவங்களில் முத்திரைப் பிடிப்புகளில் சற்று கவனம் வேண்டும். இவரது மார்வாரி நடனம் அன்று சபையில் குழுமி யிருந்த வடநாட்டுக்காரர்களால் வெகுவாக ரஸிக்கப்பட்டது. நாட்டியத்திற் கேற்ற கவர்ச்சிகரமான தேகக் கட்டும், மிகுந்த ஆர்வமுமுள்ள குமாரி சசிகலாவின் ஆங்கிக ஆகார்ய மேன்மை பயன்பட நல்ல மேக்கப்பிலும் உடை விஷயங்களிலும் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

குமாரி ஆர். விஜயலட்சுமி ஜதிகளை, ஆர்வத்துடன் ஆடினார். மிகவும் மெலிந்த உடல் ஆகையால் ஆஹார்யஎடுப்புக் குறைவு. பதங்கள் பிடிக்கையில் முகத்தில் ரஸபாவங்க

னை தக்கபடி மாற்றி மாற்றி வெளியிட நன்ருகப் பழக வேண்டும். முக்கியமாக உடல் வளர்ச்சியில் மிக்க கவனம் வேண்டும். இந்தக் குறை நீக்குவதில் கவனம் செலுத்தினுல் ஆட்டத்தில் மேலும் இவர் பிரகாசிக்கக் கூடும்.



இவ்வாண்டு, அகில இந்திய ரேடியோ நடத்திய லலித ச்ங்கீதப் போட்டியில் முதற் பரிசு பெற்ற குமாரி ராதா, ஜனதிபதி ராஜேந்திர பிரசாத்திடமிருந்து பரிசை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்கிருர் டில்லியில் நடந்த இந்த வைபவத்தில் கலந்து கொண்ட கேஸ்கர், பிரஸாத் முதலானேரை படத்தில் காணலாம்.

இவ் வி'ரு பெண்களும் ஸ்ரீ பத்தகுடி ராமஸ்வாமியின் சிஷ்யைகள். அன்றைக்கு நட்டுவாங்கத்துடன் அவரே, வெகு அருமையாக தானும் ரஸித்து சபையினரின் ரஸனையைத் தூண்டிவிடும் வகையில் நன்ருகப் பாடினர்.

சென்னை தேனம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியில் உள்ள எங்கள் ஸ்டால் எண் 174 க்கு விஜயம் செய்யுங்கள்.

முக்கிய அறிவிப்பு

49 ஆண்டுகளாகப் புகழ்பெற்ற எங்கள்

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

இப்பொழுது **புதிய** அழகிய மூவர்ண அட்டைப் பெட்டியில் கிடைக்கும் என்பதை பொதுமக்களுக்கும், வணிகப் பெருமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ. எண் *99*, *214* & *215*, மேலமாசி வீதி

மதுரை.

தடுக்கி விழுந்தால், பொட்டென்று பிராணன் போய்விடும்படி இருப்பார் 'புல் தடுக்கி பயில்வான்' ஒருவர். அவருக்குப் பெயர் ஆரோக்கியசாமி. அடுத்த வேளை சோற்றுக்கு வழி தெரியாதிருப்பாள் ஒருத்தி. அவளுக்கு தனலட்சுமி எனப் பெயர் இருக்கும். இப்படியாக சிலருக்குப் பெயர்கள் விசித்திரமாக அமைந்திருப்பதை நாம் சகஜமாகக் காண்கிறோம்.

பட உலகம் மட்டும் என்ன, இந்த வேடிக்கையி லிருந்து தப்பி விட முடியுமா? முக்கியமாக தென்னகப் பட உலகில் உலவி வரும் சில பிறவிகளுக்கும் இந்த மாதரியான பொருத்தமற்ற, அசம்பாவிதமான பெயர்களும் பட்டங்களும் வழங்கி

நுனிப்புல்

வருகின்றன. அப்படிப்பட்ட ஆசாமிகளில் ஒருவரான 'தங்கசாமி' யைப பற்றிய புராணமே மிகச் சுவையானதுதான்.

வயதுக்கு மரியாதை கொடுப்பதும், அறிவுக்கு மதிப்பு அளிப்பதும் ஆக இரண்டு வகை உண்டு. இரண்டாவதாகக் குறிப்பிட்டது இந்தச் 'சாமி' ககுக் கிடைக்க வழியே யில்லை. காரணம், அதற்கும் (அறிவு) அவருக்கும் வெகுதூரம். பள்ளியிலே தான் படிக்கவில்லை, இவ்வளவு வயதானதற்கு அனுபவப் பள்ளியிலாவது பண்பட்டிருக்கலாம் அல்லவா? அதுதான் கிடையாது.

இந்த ஆசாமி வயதானவர் என்பதற்காக அவருக்கு மரியாதை கொடுத்துவருகிறார்கள் பலர். அவருடைய தகிடுதத்தங்கள் தெரிந்தும் கூட பெருந்தன்மையாக "ஐயோ, பாவம்!" என்று இரக்கம் காட்டிவருகிறார்கள், அவருக்கு உதவி வருகிறவர்கள்.

நாடகத் துறையிலே பல வருஷங்களாக இருந்து வருகிறார். என்ன பயன்? குட்டிச்சுவர் கூடத் தான் பல்லாண்டு பல்லாண்டாக நிற்கிறது. அதுவாவது, ஒரு ஜீவன் நிற்க நிழல் அளிக்கிறது. இவரிடம் அது கூட நடக்காதே. யாரையும் அண்டவே விடமாட்டாரே இந்தப் பேர்வழி.

நாடகத் துறையிலே பல வருஷங்களாக இருந்துவருகிறார் என்ற ஒரே காரணத்திற்காக இவருக்கு பட்டம் அளித்து, ஒரு கௌரவத்தையும் அளித்தார்கள். நாடகக் கலைக்கு இவர் எந்த உருப்படியான சேவையும் செய்துவிடவில்லை. மற்ற சிலரைப்போல், எந்தவிதத் தியாகத்தையும் நினைத்துப் பார்த்தது கூட இல்லை. அந்தநாள் முதல், இன்று வரை, யாராவது ஒருவர் நிழலிலேயே அட்டையாக ஒட்டிக் கொண்டு காலத்தைக் கடத்தி வருகிறார் இவருக்கு, 'ஐயோபாவம்என்று' அவர்களும் ஆதரித்து வருகிறார்கள். இப்படித் தமக்குக் கிடைத்து வரும் ஆதரவை தவருகக் கணக்கிட்டுக் கொண்டு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவருகிறார். வைக்க வேண்டிய இடத்தில் அவரை வைக்காத தோஷம், அவர் தன்னைப்பற்றி ரொம்ப அதிகமாக மதிப்புப் போட்டுக்கொள்ளும்படி செய்து விட்டிருக்கிறது.

இவரைப் பற்றிய, சமீபத்திய ஒரு ரசமான நிகழ்ச்சியை மட்டும் இச் சந்தர்ப்பத்தில கூறவேண்டியிருக்கிறது. இவரைஒருபொருட்டாக மதித்து, கட்டுரை ஒன்று எழுதித்

தரும்படி ஒரு பத்திரிகையின் ஆசிரியர் கேட்டிருந்தார். இவரோ கட்டுரையை அந்தப் பத்திரிகைக்குக் கொடுத்ததுடன், வேறு ஒரு பத்திரிகைக்கும் அதே கட்டுரையை வார்த்தைக்கு வார்த்தை, அப்படியே எழுதிக் கொடுத்துவிட்டார். "என்னய்யா இப்படிச் செய்துவிட்டீர்களே" என்று கேட்டபொழுது, "என் இஷ்டம். நான் எத்தனை பத்திரிகைகளுக்கு வேண்டுமானாலும் கொடுப்பேன்" என்று குதர்க்க வாதத்தில் இறங்கினார். அதுசமயம் அருகிலிருந்த வசனகர்த்தா, அந்த தகிடுதத்தப்பேர்வழிசெய்தது தவறு என்று எடுத்துக்காட்டியும்கூட, அது அவர் மண்டையில ஏறவில்லை. எப்படி ஏறும? ஏற்கெனவேதான் தலை கனத்துக் கிடக்கிறதே.

'நாடக அனுபவஸ்தர்' என்று தம்மைப்பற்றி தப்பட்டம் அடித்துக் கொள்ளும், இந்த 'தங்கச்சாமி,' சிண்டு முடிந்துவிட்டே, பிழைப்பை நடத்தும் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கிறார். நெருங்கிய நண்பர்களாக இருக்கிறவர்களைக் கூட தமது வாய்த் திறமையால் கொடிய பகைவர்களாக்கி வைத்து வருகிறார். உதாரணமாக, ப உலக நால்வருடன் தொடர்பும தோழமையும் கொண்டிருந்த இரண்டு ஹாஸ்ய நடிகர்களைப் பிரித்து வைத்து, அந்த கம்பெனி மாடியிலேயே தாமே உட்கார்ந்துகொண்டிருக்கிறார். உச்சியிலே ஏறிக்கொண்டிருக்கும் இந்த ஆசாமி உழைத்து சம்பாதிப்பதையே அறியாதவர். இவர் போகிற போக்கில் இன்னும் என்னென்ன நடக்கப்போகிறதோ! ஆனால் ஒன்று, இவருடைய எத்து வேலைகள் அதிகநாள் நீடிக்க முடியாது. வேண்டா வெறுப்பாக, உதவி வருபவர்கள்கூட சீக்கிரமே இவரைக் கை கழுவிவிட யோசித்து வருகிறார்கள் என்பதையும இந்த தங்கசாமிக்குச் சொல்லி வைக்கிறோம்.

குண்டூசி

போன் எண்

85947

★

நடராஜா

பப்ளிகேஷன்ஸ்,

சென்னை-6.

ருசிமிக்க
பல தினுசு ஊறுகாய்
கள், சாம்பார் பௌடர்,
ரசம பௌடர்
முதலியன.

Manufactures

SRI VENKATA LODGE CONDIMENTS,

KUMBAKONAM . . . . S. INDIA

GP

பக்ஷிராஜாவின் "மரகதம்" படப்பிடிப்பில் பிரதான நடிகர் நடிகைகளுக்கு நடுவில் படாதிபதி—டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு.

பாண்டிய மன்னனின் அரண்மனை வாசல். அங்கே கட்டி வைத்திருக்கிறார்கள் பிரும்மாண்டமான ஒரு ஆராய்ச்சிமணி. அதன் நாக்கோடு இணைத்திருக்கும் கயிற்றை இழுத்து நாதம் எழுப்புகிறார்கள் நங்கையர் பலர். சும்மா இழுக்கவில்லை. "நீதியைக் கேட்போம" "நீதியைக் கேட்போம்" என்று கோஷமாகப் பாடியபடி மணியை அடிக்கிறார்கள்.

கணவனும் மனைவியும் தனித்துப் பேசியிருக்கையில். மாறுவேடத்தில் வந்த பாண்டிய மன்னன் அந்த வீட்டின் கதவைத் தட்டி விடுகிறான். காதலனுடன் உறவாடியிருக்கையில் கதவைத் தட்டியவனின் கையைத் துண்டிக்கவேண்டும் என்றே அந்த மங்கை ஆராய்ச்சி மணி ஒலித்து நீதி கேட்கிறாள். கதவைத் தட்டியவன் கையை வெட்டவேண்டுமெனக்கூறுகிறாள். தட்சணமே தன் கையைத் துண்டித்துக் கொள்ளுகிறான் மன்னன். குடிமக்கள் மேல் மனுநீதி தவறாத மன்னன் வைத்திருந்த அன்பை விளக்கும் சரிதம் தான் 'பொற்கைப் பாண்டியன்' கதை. இந்தக் கதை ஒரு நடன நாடகமாக சமீபத்தில் பிலிம் செண்டரில் தயாரிக்கப் பட்டது! ஸ்ரீ லட்சுமி பிக்சர்ஸாரின் "தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" படத்தில் இடம் பெறப் போகும் இந்த இசை நடன நாடகம், கதா நாயகி மரகதம், தோழிகள் ஆகியோரால் கவர்னர் முன்னிலையில் நடிக்கப் படுகிறது. கதா நாயகி மரகதமாக எம். என். ராஜமும், அவளது தோழியாக பல நடன மணிகளும் இக்காட்சியில் தோன்றியிருக்கிறார்கள். இந்தக் காட்சிகளை ஒலிப்பதிவாளர் கோபண்ணா பல கோணங்களிலிருந்தும் தயாரித்து முடித்திருக்கிறார்.

ஸ்ரீ லட்சுமி பிக்சர்ஸாரின் இந்தப் படத்தை வசனகர்த்தா ஏ. பி. நாகராஜன் உடனிருந்து ஓடி ஆடி உதவ, யோசனைகள் அளிக்க, கே. சோமு டைரெக்ட் செய்து வருகிறார். இந்தப் படத்தில் வரும் முக்கிய ஆண் கதா பாத்திரங்கள் அனை

வரும் ஒரே போலீஸ் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

மனேஜர், கே. சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, டி. என். சிவதாணு, சாயிராம், டி. கே. ராமச்சந்திரன், எம். என். ராஜம், புதுமுகம், சிவ காமி, கண்ணும்பா, சி. கே. சரஸ்வதி, சி. டி. ராஜகாந்தம், எம். எஸ். எஸ். பாக்கியம் ஆகியோர் இப்படத்தில் முக்கிய நடிகர், நடிகைகள்.

ஊர்த் திருவிழாவிலே அந்த நாள் இறுதி நாள். அழகான தேர் கிளம்பி வீதியிலே வந்து கொண்டிருக்கிறது. தர்மகர்த்தா பக்தியிலும் ஆனந்தத்திலும் மெய்ம்மறந்திருக்கிருர், சீக்கிரமே ஒரு பேரிடி காத்திருக்கிறது என்பதை அறியாதவராக. தேர் முட்டியை நோக்கி வந்து கொண்டிருந்த தேர் நடு வழியிலே நின்று விடுகிறது. தர்மகர்த்தா மீது விரோதம் கொண்ட வாள்சுட்டியார் தேர் இழுக்கும் ஜனங்களை எல்லாம் விரட்டி விடுகிருர்.

கலங்கிய உள்ளத்தோடு உட்கார்ந்திருக்கும் தர்மகர்த்தா. தந்தையின் ஏக்கத்தைக் கண்டு கலங்கி நிற்கிருள் மகள் சகுந்தலே. ஆறுதல் கூற நண்பர் சீமா அய்யங்காரும் அங்கு வந்திருக்கிருர். 'வீடு வீடாகச் சென்று ஆள் பிச்சை கேட்போம்' என்று மகள் சகுந்தலே ஒரு யோசனையைக் கூறுகிருள்.

நாடகமாக நடிக்கப்படும், சேவா ஸ்க்ரீன்ஸ் திரைப்படமாக்கி வரும் "நாலு வேலி நிலத்" திற்கென மேற்படி காட்சிகள் வி. சீனிவாசனின் டைரெக்ஷனில் பரணி ஸ்டுடியோவில் தொடர்ந்து படமாக்கப்பட்டன. மேல்படி காட்சிகளில் வாள்சுட்டியாராக எஸ். வி. சகஸ்ரநாமம் தர்மகர்த்தாவாக எஸ். வி. சுப்பையா, மகள் சகுந்தலேயாக மைனவதி. நண்பர் சீமா அய்யங்காராக கே. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் நடித்தார்கள். நிமாய் கோஷ் இக்காட்சிகளை யெல்லாம் ஒளிப்பதிவு செய்தார்.

பாஞ்சாலங் குறிச்சியே ஒரே கோலாகலமாகக் காட்சி அளிக்கிறது ஜக்கம்மா திருவிழா என்ருல் சும்

டி. பி. முத்துலட்சுமி, பத்மினி, சுப்பாராவ், சக்தி கிருஷ்ணசாமி, பி. ஆர். பந்துலு ஆகியோர் "வீரபாண்டிய கட்ட பொம்மன்" படப்பிடிப்பிலே.

மாத்தானா? அந்தத் திருவிழாவைப் பார்க்கத்தான், வெள்ளையம்மா, வெளியூரிலிருந்து வந்திருக்கிறாள். தன் தோழி காமாட்சி வீட்டில் தங்கியிருக்கும் அவளுடைய நோக்கம் ஜக்கம்மா திருவிழாவைப் பார்ப்பது மட்டுமல்ல!

அன்று திருவிழாவிலே வெள்ளையம்மா வளர்க்கும் காளை ஓட விடப்பட இருக்கிறது. அதை

மான "வீரபாண்டிய கட்ட பொம்ம" னுக்காக கேமிராவுக்குள் புகுந்தது! தோழி காமாட்சியாக டி. பி. முத்துலட்சுமியும், வெள்ளையம்மாளாக பத்மினியும், நடித்த இந்தக் காட்சியை பி. ஆர். பந்தலு டைரெக்ஷனில், டபிள்யூ சுப்பராவ் உருவாக்கினார்.

ஞானசாகரின் ஆஸ்ரமம் சாந்தமே உருவாக இருக்கும் அவர் முன் [illegible] கொண் வந்

ரோகிணி பிக்சர்ஸ் "தாய்நாடு காத்த தனயன்" படப் பிடிப்பில், பிரதம நடிகை சாவித்திரியைச் சுற்றி எச். எம். ரெட்டியும் தயாரிப்பில் சம்பந்தப் பட்டவர்களும்.

அடக்கி வெற்றி கொள்ளும் வீரனுக்குத் தான் அவள் மாலையிடப் போகிறாள். காளையை அடக்கும் அந்த வீரனைக் காணவே சகல அலங்காரங்களுடன் தன் தோழியுடன் கிளம்புகிறாள் வெள்ளையம்மா.

காமாட்சி வீடு சம்பந்தப்பட்ட இந்தக் காட்சி பரணி ஸ்டுடியோவில் பத்மினி பிக்சர்ஸின் முழு கலர்ப்பட

தவள் போல் நிற்கிறாள் மங்கை ஒருத்தி. பிரதாபன் ஒரு கொள்ளைக்காரன் என்று மன்னன் ஆதிவர்மன் அறிவித்து விட்டிருந்தான். அதுதான் மங்கையின் கோபத்திற்குக் காரணம்.

"என்ன யோசிக்கிறீங்க: அந்த ராஜா நல்லவரு, அப்படி இப்படின்னு சொன்னீங்களே.

இப்ப என்ன ஆச்சு''? இது அந்த மங்கை.

ஞான சாகரரோ மன்னனின் நீதியில் ஆழ்ந்த நபபிக்கை கொண்டவர். ஆகவே "மன்னனைக் குறை சொல்லாதேயம்மா, பிரதாபனைக் குற்றவாளி என்று காரணம் இல்லாமல் சொல்ல மாட்டார்'' என்று மங்கைக்கு பதில் கூறினார். பிரதாபன் மேல் கொண்ட காதல் மங்கையை மேலும் ஆத்திரபடையவே செய்கிறது.

லட்சுமி பிக்சர்ஸின் மூன்ருவது தயாரிப்பில் நடிக்க வந்த எம். என் ராஜமும் கோஷ்டி நடனப் பெண்களும்

'பட உலக பப்பாஜி'யான எச். எம். ரெட்டியார் மேற்பார்வையில் ஒய். ஆர். சாமி டைரெக்ட் செய்து வரும் படத்திற்கான காட்சி இது. ரோஹிணி பிக்சர்ஸின் தயாரிப்பான "தாய்நாடு காத்த தனயன்'' என்ற இந்தப் படம் ஃகால்டன் ஸ்டுடியோவில் ஜரூராகத் தயாராகிருகிறது. இந்தப் படத்தில், என். டி. ராமாராவ், சாவித்திரி, சரோஜா தேவி, எம். என். நம்பியார், பிரண்ட் ராமசாமி, முத்துலட்சுமி, ராஜநலா, ஓ. ஏ. கே. தேவர், கே. நடராஜன், ராயராஜ் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

டைரெக்டர் ஸ்ரீனிவாசன் ஒலிப்பதிவாளர் நிமாய் கோஷ் ஆகியோருடன் சகஸ்ரநாமம், மைனாவதி, ராஜகோபால்—"நாலுவேலி நிலம்'' படப்பிடிப்பின்போது.



இதமான காற்று வீச்சளித்து இனிய நினைவுகளைத் தருபவை.
EWI LTD.
போனிக்ஸ்
விசிறிகள்
-CHARI-
சென்னை, ஆந்திர ராஜ்யங்களுக்கு ஏஜண்டுகள்:
கில்லண்டர்ஸ் அர்பத்நாட் & கோ லிமிடெட், சென்னை-1



இப்பொழுது பல படங்களில் நடித்துவரும்
பத்மினிக்கு உற்ருர் உறவினருடன் டெலி
போனில் பேசத்தான் நேரம் கிடைக்கிறது!

ராஜேஸ்வரி பிலிம்ஸ்
சுமங்கலி
தயாரிப்பு.
V. தாண்டவம்
டைரக்ஷன்
M.K.R. நம்பியார்



முழுக்க
முழுக்க
சிரிப்பை
அள்ளிச்
சொரி
கிறது.
ரவி எம் புரொடக்ஷன்ஸ்
மாமியார்
மெச்சிய
மருமகள்
தயாரிப்பு & டைரக்ஷன்:
கிருஷ்ணன் பஞ்சு


எம். என். ராஜம் — ராஜேந்திரன் காதல் ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் ஜி. வரலடசுமி புது மாதிரியான வேடத்தில் நடிக்கிறார்.
AVM

எம்.ஏ.வி.பிக்சர்ஸ்
மாதவி
ARAT
UDIO

அழகான ஆரண
ங்கு ஒருத்தி
ஆடிப்பாடும்
போது, "திருடா
தே" என்று எவ்
வளவுதான்
சொன்னாலும்,
அது நடக்கக்
கூடிய காரியமா?
ஏ. எல். எஸ்.
"திருடாதே"யில்
எம். என். ராஜம்.

மதுரையில் ஜவுளி மாளிகை

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்டோர்ஸ்

கண்ணைக் கவரும்
கலர்களில்

அற்புதமான பார்டர்களில், அசல், கொள்ளேகாலம் பட்டு சேலைகள், மைசூர் ஜார்ஜட்-கிரேப் சேலைகள், காஞ்சீபுரம் பட்டு புடவைகள், சோளி பீஸ்கள், பாவாடைகள், சரிகை வேஷ்டிகள் முதலிய பட்டு-நூல் ஜவுளிகளுக்கும்,

நம்பிக்கையான இடம்

காட்சி சாலை:

6/8, மேல கோபுர வீதி, மதுரை.

இரண்டு பொய்கள்

"வாலி"

சிங்கவேள் குன்றத்துச் சிறைக்கூடத்தின் ஒரு மூலையிலே, எண்சாண் உடம்பை இரு சாணுகக் குறுக்கிக் கொண்டு சுருண்டு படுத்திருந்தார், அந்தக் கிழவர். இடையிடையே இருமல், அவர் தொண்டையைக் கொரித்தது. மேனி முச்சூடும் வரி படர்ந்து சதைகள் சுருங்கிப் போயிருந்தன. மொத்தத்தில், அவருடைய வாழ்க்கைச் சரிதம் முற்றுப் பெற, ஒரு சில ஏடுகளே விட்டு வைக்கப் பட்டிருந்தன !

அவர் இருந்த அறைக்குப் புதிய விருந்தாளி ஒருவன் வந்து சேர்ந்தான். இளம் வயது. கண்கள் நெருப்புக் கொழுந்தாய்ச் சுடர் விட்டன. வைரம் பாய்ந்த உடலின், ஒவ்வொரு மூட்டிலும், அவசரத்தின் துடிப்பு குறுகுறுத்துக் கொண்டிருந்தது. வாழ்க்கையின் தொடக்கத்தி லிருப்பவனை, வெஞ்சிறையில் தள்ளி வீணடித்து விட்டார்களே ?

வேதனைப்பட்டார் கிழவர்; வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்.

"வயதை மீறிய குற்றம், நீ என்னப்பா செய்துவிட்டாய்......?" இளைஞனைப் பார்த்துப் பரிவோடு கேட்டார், அவர்.

"பொய் சொன்னேன் ...!" என்று ரத்தினச் சுருக்கமாகப் பதிலிறுத்தான், அவன்.

"பொய் சொன்னையா...?"

"ஆமாம்! கொலை செய்துவிட்டு 'இல்லை'



நவீன வேலைப்பாடமைந்த

வைரம், தங்க நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்

கௌரி ஜுவல்லரி மார்ட்

தங்களுக்குத் தேவையானபடி
பல மாதிரி நகைகள்
தயார் செய்து தரப்படும்

72/75, பைக்ராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

யென்று மறுத்தேன் ஆனால், அரசவையில் பொய் நிரூபிக்கப்பட்டுக் கையும் விலங்குமாக இந்தச் சிறைக் கூடத்தில் காலத்தைக் கழிக்க வேண்டியவனாகி விட்டேன்!"

இளைஞன் சொன்னதைக் கேட்டுக் கிழவர் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்; அவன் 'திரு திரு' வென விழித்தான்!

"தம்பி! பொய் சொல்வது குற்றமென்றால், உலகமே தண்டனைக்கு ஆளாக வேண்டியதுதான்!...சொல்லும் பொய்கூட, சூழ்நிலையின் சாதகத்தால் மெய்யாகிறது. அப்படிப் பட்ட விசித்திரமான விளைவுகளைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லை, சொல்கிறேன், கேள்."

இளைஞன் கதை கேட்கத் தயாரானான்; கிழவர் சொன்னார்.

"முல்லைவள நாடும், இந்த சிங்கவேள் குன்றமும் காவிரிக் கரையின் இரு மருங்கிலும் கூடாரமிட்டுப் போர் முரசம் முழங்கிக்கொண்டிருந்த காலம்! அப்போதுதான், முல்லைவள நாட்டுப் பாசறையிலே, வஞ்சக விருட்சத்திற்கு வித்திட்டாள் வேல்விழி!"

"வேல் விழியா...?"

"ஆம்!" என்று வரலாற்றை விரிவுபடுத்திச் சொல்லலானார், கிழவர்.

மார்பகம் விம்மி விம்மித் தணியப் பெருமூச்செறிந்து கொண்டிருந்தாள், அவள்.

"வேல்விழி!" என்றவாறே, தன் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தவளின் மோவாயை வருடினான், முல்லைவள நாட்டுப் படைத் தளபதி பராந்தகன்.

"ஹும்......!" என்று கைகளை உயர்த்திக் கோர்த்துச் சோம்பல் முறித்தாள் வேல்விழி. புழுக்கத்தால், அவளுடைய மேலாடைகள் நனைந்திருந்தன. முந்தானை விலகி

யிருந்ததை, முழு நிலா காட்டிக் கொடுத்துவிட்டது!

பராந்தகன் உணர்ச்சி வசப்பட்டு, ஊமையாகிவிட்டான். வேல்விழி அவன் கழுத்தைப் பற்றி இழுத்தாள். முகமும், முகமும் உராயும் போது மேகத் திரையில் நிலவு தன்னை மறைத்துக்கொண்டது.

"இது கனவல்லவே?" என்ருன், அவன். அவள் பதில் சொல்லாமல் உதட்டைப் பிதுக்கினுள். அதில் ஈரப்பசை உலராமல் அப்படியே இருந்தது!

பிறகு வேல்விழிதான் பேச்சைத் துவக்கினுள்: "நீங்கள் மட்டும், என்னேடு சிங்கவேள் குன்றத்திற்கு வந்துவிட்டால்......?"

"வரத்தானே போகிறேன்; என்னை அழைத்துப் போகத்தானே நீயும் வந்திருக்கிருய்!" என்று அவள் கன்னத்தில் மெல்லக் கிள்ளினுன், பராந்தகன்.

"இந்தக் குத்துவாள் கூர்மையா என் (புதுமுகம் ஜயஸ்ரீ) பார்வை கூர்மையா?" என்று கேட்பது போலில்லை! "தெய்வ பல"த்தில்.

"ஆ! கிள்ளாதீர்கள்!" என்று பொய்க் கோபம் காட்டினுள் அவள்.

"கிள்ளினுல் என்னவாம்...?" கொஞ்சினுன்.

"சிவந்துவிடும்!"

"என் கைதானே? ஹாம், உன் கன்னத்துச் சிவப்பு என் கையில் ஒட்டிக்கொண்டுதான் விடும்......"

"உங்களுக்குப் பொல்லாத குறும்பு..!" என்று எழுந்து போக யத்தனித்தாள்; அவள் தாவணியைப் பற்றி இழுத்தான், பராந்தகன்.

வெட்கம் தாளாமல் வேல்விழி, தன் இரு கரங்களையும் கோர்த்து நெஞ்சை மறைத்துக்கொண்டு கெஞ்சினுள்.

அப்போது போர் முரசம் ஒலித்தது!

"சரி, நான் வருகிறேன்!" என்று எழுந்து நின்ருன் பராந்தகன்.

"நான் எல்லைப்புறத்துக் காளி கோயிலில் இன்றிரவு நடு ஜாமத்

தில் உங்களுக்காகக் காத்திருப்பேன் " என்றாள் வேல்விழி.

"முல்லைவள நாட்டுக்கே முழுக்குப் போட்டுவிட்டு ஓடிவந்து விடுகிறேன்; போதுமா!" என்றவாறே உடைவாளை எடுத்து உறையிலே செருகிக்கொண்டான், பராந்தகன்.

"சிங்கவேள் குன்றத்து மன்னன் சிங்காரவேலனின் அரசவை ஆட்டக்காரி, வேலவிழி—நம் படைத் தளபதி பராந்தகனை மயக்கி விட்டாள்; அவன் அவளோடு இன்றிரவு வேற்று நாட்டுக்கு ஓடப் போகிறான்......"

ஒற்றன் உலகப்பன் மூலம் இந்தச் செய்தியை அறிந்த முலலைவள நாட்டு மன்னன் முத்துவேலழகன், அமைச்சர் அறிவழகரை அழைத்து வரச்சொல்லி ஆலோசித்தார்.

"பராந்தகன்மீது, இது வீண்பழி; உப்பிட்டவரை உள்ளளவும் நினைப்பதில் அவன் நாயக்குச் சமானம்!" என்று திட்டவட்டமாக முடிவுகட்டிப் பேசினார், அமைச்சர் அறிவழகர்!

மனனன் முத்துவேலழகனுக்கு மூளையே குழம்பிவிட்டது! ஒற்றன் சொல்லுவதை நம்புவதா, அமைச்சர் சொல்வதை நம்புவதா?

எதற்கும், நள்ளிரவில் காளி கோயிலுக்குச் சென்று வருவது என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்!

முல்லைவள நாட்டு எல்லைப் புறத்திலுள்ள காளிகோயில் வெறிச்சோடிப் போயிருந்தது. சுவர்க் கோழிகள் விட்டுவிட்டுச் சுதிகூட்டி, இரவின் பயங்கரத்தை அதிகப் படுத்தின.

ஒற்றன் உலகப்பனும், மன்னனும் ஒரு அடர்த்தியான கள்ளிச் செடியின் பின்னால் இருந்த பள்ளத்தில் ஒளிந்துகொண்டனர்.

"அதோ பாருங்கள், அரசே! வேல்விழியின் பின்னே, தலையிலே முக்காடிட்டுத் தயங்கித் தயங்கி வருகிறான் பராந்தகன்...!" என்று திடீரென சுட்டிக்காட்டினான் உலகப்பன்.

மன்னன் முத்துவேலழகன் உற்று நோக்கினான். வேல்விழி, காளி கோயிலுக்குள் நுழைய, பராந்தகன் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு அவளைப் பின்தொடர்ந்தான்.

அவ்வளவுதான்! இடையிலே செருகியிருந்த கட்டாரியை உருவிப் பராந்தகனின் மார்பை நோக்கிக் குறி வைத்து விட்டெறிந்தான் முத்துவேலழகன். 'அய்யோ!' என்று அலறி அடிமரம்போல் சாய்ந்தான் பராந்தகன்.

".. நாட்டையே காட்டிக்கொடுக்கத் துணிந்துவிட்ட துரோகி!"

ரத்தவெள்ளத்தில் மிதந்து கிடந்த பராந்தகன் மன்னனை ஏறிட்டுப் பார்த்தான்; வேந்தனின் விழிமலர்கள் வேதனையின் வெக்கையில் வாடிக்கிடந்தன.

முக்கலும் முனகலும் நாவைச் சுருட்ட, மெள்ள மெள்ளப் பேசினான், பராந்தகன்.

"அரசே! நான் துரோகியல்ல! சிங்கவேள் குன்றத்துக்கு, நமக்கும் தெரியாத ஒரு சுரங்கப் பாதை எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே, வேல்விழியின் வசமாகி மயங்கியவன் போல் பின் தொடர்ந்தேன்... அவசரப் பட்டு, என் வாழ்வை முடித்து விட்டீர்கள்...!"— பராந்தகன் பிணமாகிவிட்டான்!

முத்துவேலழகனுக்கு, மேனி முச்சூடும் வியர்த்துக் கொட்டியது.

"பராந்தகா! நீ, தியாகி!" இப்படித் தன் அவசர புத்தியை நொந்து கொண்டான்!

முல்லைவள நாட்டுச் சுரங்க வழியே தான் மட்டும் தப்பிவந்த வேல்விழி சிங்கவேள் குன்றத்து எல்லை மேட்டிற்கு வந்தபோது பயந்தே போனாள்.

அந்த எல்லை மேட்டிலே, முல்லைவளநாட்டு அமைச்சர் அறிவழகர்.

அவளை எதிர் கொண்டடைத்தது தான், காரணம்!

“நீ யார்?”—கம்பீரமான குரலில் வினவினார், அறிவழகர்.

“நான்... நான், முல்லை வள நாட்டுக்குச் சென்று வருகிறேன்... அந்நாட்டுப் படைத் தளபதி பராந்தகனைப் பார்ப்பதற்காக......” வேல்விழி வாக்கியத்தை முடிக்கவில்லை

“உனக்கும், அவனுக்கும் என்ன சம்மந்தம்...?”

“நான் பராந்தகனின் தங்கை!”

—அவள் ‘வெடுக்’ கென்று பதில் சொன்னாள்; அவ்வளவுதான்! எங்கிருந்தோ ஒரு கட்டாரி வந்து, அவள் இதயத்தில் பாய்ந்தது!

துடித்துத் துவண்டு கீழே விழுந்தாள் வேல்விழி; தொடர்ந்து, சிங்கவேள் குன்றத்து மன்னன் சிங்கார வேலன் வந்தான்!

“அடடா! ஒன்றும் அறியாத பெண்ணின் உயிரை பலி வாங்கி விட்டீர்களே?” என்று சூள் கொட்டினார் அறிவழகர்.

“இவளா ஒன்றும் அறியாதவள்; துரோகி! என்னுடைய அரசவை ஆட்டக்காரியான இவளைப் பராந்தகனை மயக்கி அழைத்து வருவதற்காக அல்லவா அனுப்பிவைத்தேன்! அவனுக்கு, இவள் தங்கை என்று தெரிந்திருந்தால் இந்தத் தவரைச் செய்திருப்பேனா...? அட்டா! இதற்குள் இவள் அவனிடம், நமது அந்தரங்கங்களை எல்லாம் அம்பலப் படுத்தி யிருப்பாளே...?”

—சிங்காரவேலனுக்குச் சிந்தை குழம்பியது!

‘பராந்தகனை நான் அழைத்து வந்திருக்கமாட்டேனா...? இப்படி நீங்கள் வேல்விழியை அனுப்பி வைத்த விஷயம் எனக்குத் தெரியவே தெரியாதே...?”

—அறிவழகர் குறைப்பட்டுக் கொண்டார்.

அப்போதுதான், சிங்கவேள் குன்றத்து ஒற்றன், முல்லைவள

மணம்
குணம்
நிறைந்தது

பிர்மா
புகையிலை

A.N
இரத்தினம் & CO
திருவாரூர்

நாட்டிலிருந்து புரவியேறி அங்கே வந்து சேர்ந்தான்.

சிங்காரவேலனின் செவிகளில், ஒற்றன் தான் கொண்டுவந்த சேதியை மெதுவாகச் சொன்னான்.

அரசன், வெற்றிச் சிரிப்பு சிரித்தான்; 'அறிவழகரைக் கைது செய்யுங்கள்!' என்று தன் பணியாட்களுக்கு ஆணையிட்டான்.

"மன்னா! நான் என்ன பிழை செய்தேன்?" என்று பயத்தால் நாக்குழற உளறினார் அறிவழகர்.

"உன்னை வளர்த்து, அமைச்சனாக்கிய முல்லைவள நாட்டையே எனக்குக் காட்டிக் கொடுத்தாய், அவ்வப்போது, எனக்கு முத்துவேலழகனின் பலவீனங்களை எடுத்துரைத்தாய்! இதே துரோகத்தை நீ எனக்கும் செய்யலாமல்லவா? அதனால்தான் உன்னையும், பராந்தகனையும் இங்கு தந்திரமாக வரவழைத்துச் சிறைப்படுத்த எண்ணினேன். என் திட்டப்படி நீ சிக்கிவிட்டாய்; பாவம்! பராந்தகன், முத்துவேலழகனின் கட்டாரிக்கே பலியாகிவிட்டானாம்..."

— இடி, இடி' யென்று கெக்கலித்தான் சிங்காரவேலன்.

"பராந்தகன், மடிந்து போனானா? என்றவாறு சிலையானார் அறிவழகர்.

கிழவர் கதையை முடித்துவிட்டு, விளக்கம் தந்தார்.

"பராந்தகன், வேல்விழியின் வசமாகி உண்மையாகவே நாட்டுக்கு துரோகம் செய்ய நினைத்தான்; ஆனால், முத்துவேலழகனிடம் கையும் களவுமாகப் பிடிபட்டுக் கட்டாரியால் குத்துப் பட்டதும், 'தான் சுரங்க வழியைத் தெரிந்து கொள்வதற்காக வேல்விழியைத் தொடர்ந்தேன்' என்று பொய் சொல்லி உயிர் விட்டான்! முத்துவேலழகன் அவனைத் 'தியாகி!' என்று பாராட்டினான்... அதே நேரத்தில், சிங்கவேள் குன்றத்து எல்லையிலே முல்லைவள நாட்டு அமைச்சர் அறிவழகரைக் கண்டதும் பயந்துபோய் 'நான், பராந்தகனின் தங்கை!' என்று பொய் சொன்னாள் வேல்விழி. அந்த வார்த்தையை ஒட்டுக் கேட்ட சிங்காரவேலன் அவளைத் 'துரோகி' என்று கட்டாரியால் குத்திக் கொன்றான். உண்மையிலேயே, அரசவை ஆட்டக்காரி என்ற முறையில் தன் கடமையைக் குறையின்றி முடித்தவள் தானே, வேல்விழி? இருந்தாலும், அவள் சொன்ன பொய், அவளை துரோகியாக்கிவிட்டது!"

—கதை கேட்டுக் கொண்டிருந்த இளம் கைதி சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டான்.

"வேல்விழி 'பராந்தகனின் தங்கையல்ல' என்பது அறிவழகருக்கு எப்படித் தெரியும்?"

"அறிவழகர், பராந்தகனின் தந்தையாயிற்றே?! தந்தையும், மகனும் சேர்ந்தே முல்லைவள நாட்டிற்கு துரோகம் செய்திருக்கிறார்கள்; அதற்கேற்ற முடிவையும் அடைந்திருக்கிறார்கள்!

இளைஞன் விவரம்கேட்டு வியந்தான்.

"இரண்டு பொய்கள், சூழ்நிலையின் சாதகத்தால் வெவ்வேறான விளைவுகளை ஏற்படுத்தி விட்டனவே! நாட்டைக் காட்டிக்கொடுத்துக் கடமையில் தவறிய பராந்தகன் 'தியாகி' யானான்; கடமையை ஏற்றுக் கணிகையாகச் செயல் புரிந்த வேல்விழி, 'துரோகி' யானாள்!... ஆமாம், பராந்தகனின் தந்தைதான், அறிவழகர் என்பது......"

"எனக்கு எப்படி இவைகளெல்லாம் தெரியும் என்று தானே, கேட்கிறாய்...? நான் தானப்பா அந்த அமைச்சன் அறிவழகன்!"— என்றவாறே தலை குனிந்தார் கிழவர். இளைஞன் வியந்து வாயடைத்துப்போனான்!

வாழ்க்கை
(வி)சித்திரம்
அமைப்பு:
குண்டுசிக்குழு
சித்திரம்:
முத்து
1916
1916 ம். வருஷம் ஜனவரி மாதம் 11 ம் தேதி மலையாளத் தைச்சேர்ந்த வட வனூரில் மருதூர் குடும்பத்தில் பிறந்தார்.
அவரும், அவரது மூத்த சகோ தரர் சக்ரபாணியும் பள்ளியில் சேர்க்கப் பட்டனர்
பள்ளிக்கூட நாடகத்தில், லவனைக நடித்த அவர், சத்ரு க்னனைக நடித்தபையனுடன், உண்மைச் சண்டையே போட்டுவிட்டார்
போலீஸ் இலாகாவில் வேலை பார்த்த ஒரு உறவினரால், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சக்ர பாணியும்-ராமச்சந்திரனும் நடிகர்களாக சேர்க்கப்பட்டனர்

கம்பெனியில் நடனம் கற்றார். நடனவாத்தியாரிடம் அடி வாங்கினார்.
கம்பெனியில். உத்தரன், அகஸ்தியர், பாத்திரங்களில் நடித்தார்.
பி.யு. சின்னப்பா கதாநாயகனுக நடித்த நாடகங்களில், கதாநாயகியாகவும் நடித்தார்.
கம்பெனியிலிருந்து விலகி 1930 ம் வருடம் ரங்கூன் சென்று நாடகங்களில் நடித்தார்
மீண்டும் அதே கம்பெனிக்குத் திரும்பி வந்து 'ஸ்டண்ட்' கதாபாத்திரங்களில் நடித்தார்.
முதல் முதல் "சதிலீலாவதி" படத்தில் இன்ஸ்பெக்டராக நடித்தார்.

மாயாமச்சீந்திரா, தக்ஷயக்ஞம், சீதாஜனனம், ஸ்ரீமுருகன், ஆகப் புராணப்படங்களில் நடித்தார்.
முதன் முதல் கதாநாயகனாக நடித்தபடம் ஜூபிடர் பிக்சர்ஸ் ராஜகுமாரி.
வாள் வீசும் கதாபாத்திரங்களில் மக்களின் ஆதரவு பெற்றார்.
தி.மு.கட்சியில் சேர்ந்து, புரட்சி நடிகரானார்.
நாடோடி மன்னன்
வெற்
விழா
"நாடோடி மன்னன்" படத்தைசொந்தத்தில் தயாரித்து வெற்றி விழாக் கொண்டாடினார்.
M.G.R பிக்சர்ஸ்
அடுத்த தயாரிப்பு
பொன்
ன்
கல்கி
கல்கியின் பொன்னியின் செல்வனைப் படமாக்கவிருக்கிறார் ☆ ☆ ☆

''நான் ஜெமினி வி. சீதாராமனேதான். உங்களுக்கு சந்தேகமிருந்தால் இந்த ஜாவர் சீதாராமனைக் 'கேளுங்கள்''' என்று வைஜயந்தியிடம் சொல்கிறார், மனேகர் முன்னிலையில். — "அதிசயப் பெண்ணில்"

என். கண்ணன் (காஞ்சீபுரம்)

இரண்டு கதாநாயகிகள் வருகிற படங்களில், இறுதியில் ஒருத்தியை சாகடித்து விடுகிறார்களே, ஏன்?

இதற்குக் காரணம் இருதாரச் சட்டம் அமுலில் இருப்பதுதான் என்று மட்டும் நான் சொல்லமாட்டேன். அப்படி ஒருத்தியைக் கொன்றால்தான் கதையில் 'ஜீவன்' ஏற்படும் என்று படத் தயாரிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் கருதுவதுதான் முக்கிய காரணம்.

வி. கல்யாணி (கரூர்)

எனக்குக் கல்யாணமாகி ஆறு மாதங்கள் ஆகின்றன. என் கணவர் என்னைவிட சீட்டாட்டத்தையே அதிகம் விரும்புகிறாரே?

சரிதான், பேசும் ராணி வீட்டிலிருக்க பேசாத (நான்கு) ராணிகளைத் தேடிப் போய்விடுகிறார் போலும்! உங்கள் நிலைக்கு நான் மிகமிக அனுதாபப்படுகிறேன்.

ரா. பிச்சமுத்து (காங்கேயம்)

எல்லா தேசங்களுமே ''சமாதானம், சமாதானம'' என்று தான் பேசிவருகின்றன. இருந்தும், யுத்த பயமுறுத்தல் என்னவோ போய் விட்டதாகத் தெரியவில்லையே?

யுத்த பயமுறுத்தல் என்ற எதிரொலி எதேச்சாதிகார ஆசை என்ற ஒலி இருக்கும்வரை எப்படி மறையமுடியும்?

டி. எம். கனகசபை (மதுரை)

மனிதன் தன் காதை சரியானபடி பயன்படுத்த என்ன செய்ய வேண்டும்?

வீண் வம்புகளுக்கும் புரளிகளுக்கும் அதைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

பி. பங்கஜம் (தாம்பரம்)

சினிமா நட்சத்திரங்கள் யாரும் தற்கொலை செய்துகொண்டதே இல்லையே, ஏன்?

திரையிலே அப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்து, நடித்து அதன்மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டிருக்குமோ, என்னவோ?

பஞ்சாட்சரம் (தேனம்பேட்டை)

உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?

கேள்வி கேட்பவர் நீங்கள்; பதில் அளிப்பவன் நான். அவ்வளவுதான்.

எம். ஆர். புருஷோத்தம் சென்னை-7

ஒருவன் தனது கடந்த காலத்தை எண்ணிப் பார்ப்பது அவசியமா?

அவசியம் என்றுதான் சொல்லுவேன். வருங் காலத்திற்கு வழிகாட்டி உஷார்ப் படுத்துவது கடந்த காலம்தான்.

எஸ். லலிதா (லால்குடி)

திரைப் படங்களில் விசேஷமாக உங்களை நகைக்க வைப்பது எது?

சில நட்சத்திரங்களின் சோக நடிப்பைப் பார்க்கும்போது எனக்கு அந்த உணர்ச்சி ஏற்படுவது உண்டு.

ஜி. ராமசாமி (விழுப்புரம்)

தினசரி பல கேள்விகள் வந்து குவியுமே! அவைகளைப் பார்த்துப் பார்த்து உங்களுக்கு சலிப்பு ஏற்படுவது இல்லையா?

சலிப்பா? நம்மிடம் இவ்வளவு பேர்கள் கேள்விகள் கேட்கிறார்களே என்ற எண்ணத்தில் களிப்புத்தான் ஏற்படுகிறது.

வி. நவநீதம் (தஞ்சாவூர்)

ஆண், பெண் இருவரில் அழகாகக் காணப்படுவது யார்?

ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அழகாகக் காணப்படுவார்கள். அதுதான் இயற்கை!

வ. கோபாலன் (நத்தம்)

முத்தம் என்பதன் உட்பொருள் என்ன?

அன்பு கொண்ட ஒரு உள்ளம் மற்றொன்றுக்கு அதைத் தெரிவிக்கும் முத்திரை.

வி. சக்ரபாணி (கும்பகோணம்)

பெண், தான் காதலிக்கும் ஒருவனை மற்றொருத்தி நேசிப்பதைப் பார்த்தால் பொறாமைப்படுகிறாளே, அது ஏன்?

காரணம், அவள் விரும்புவது முதலாளித்துவமே அல்லாது பாகஸ்தளாக இருப்பதை அல்ல.

எஸ். கோமதி (திருவாரூர்)

சிவாஜி கணேசனும் பத்மினியும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள் என்பது உண்மையா?

நூற்றுக்கு நூறு உண்மை; "தங்கப் பதுமை" "மரகதம்" "சுமதி" இப்படி இன்னும் பல படங்களில்.


ஸேவாஸ்கிரீன்ஸ்
நாலு வேலி நிலம்
டைரக்ஷன்: வி. ஸ்ரீனிவாஸன்

என். கே. சாமி (சிருதூர்)

அன்பு என்பது மட்டும் இருந்தால் இவ்வுலகில் உயிர் வாழ்ந்து விட முடியுமா ?

அது மட்டும் சாத்தியம் என்றால், ஒண்ணேகால் ரூபாய் கொடுத்து அரிசியும் பருப்பும் வாங்கத் தேவையில்லையே!

வி. ரங்கநாதன் (கடலூர்)

நம் சினிமாப் படங்களைப் பார்த்து விட்டு காதல் கொள்ளும் மாணவர்–மாணவிகளைப் பற்றிய உங்கள் கருத்து என்ன ?

செலவு என்ற சூறவளிக் காற்று வீச, உணர்ச்சிக் கடலில் மிதக்கும் ஜோடிகளெனவே நான் அவர்களை மதிப்பிடுகிறேன்.

கமலா சிவராமன் (மாயூரம்)

ஒரு நட்சத்திரத்தின் புன்னகைக்கும், அரசியல்வாதியின் புன்னகைக்கும் என்ன வித்தியாசம் ?

இரண்டுமே செயற்கையானதுதான். முன்னவர் சிரிப்பது ரஸிகர்களை மகிழ்விக்கவும், பின்னவர் சிரிப்பது வோட்டர்களைத் திருப்திப்படுத்தவுமாக இருக்கும்.

ஆர். கண்ணன் (சிதம்பரம்)

நடிகை சாவித்திரிக்கு ஜெமினி கணேசனும், ஜெமினிகணேசனுக்கு சாவித்திரியும் ரஸிகர்கள் தபாலுக்கு பதில் அளிக்கும் விஷயத்தில் உதவி செய்வது உண்டா ?

இருவருமே, "தன் கையே தனக்கு உதவி" என்ற பழமொழியில் நம்பிக்கை கொண்டவர்கள்.

வி. கணேசன் (காரைக்குடி)

தங்கள் படத்திற்கு வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிக்க பல படாதிபதிகள் குற்றாலத்தை நாடிப் போவதன் மர்மம் என்ன ?

மர்மமுமில்லை, மண்ணாங்கட்டியுமில்லை. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதுபோல்தான் இது. ரம்மியமான பல காட்சிகளைப் படமாக்கலாம், அப்படியே குற்றாலம் ஸீஸனையும் அவர்கள் அனுபவிக்கலாம் அல்லவா?

கா. தி. ராஜன் (கருத்தட்டாங்குடி)

பொய் கூறுபவனைப் பற்றிய தங்கள் கருத்து என்ன ?

எப்பொழுதாவது பொய் பேசுகிறவன் பொய்யன்; அடிக்கடி பொய் பேசுகிறவன் அரசியல்வாதி; மெய்யே பேசாதவன் ராஜதந்திரி. சரிதானே!

டி. எஸ். ராமசேஷன் (கரூர்)

சிவாஜி நடிக்கும் "ஹரிச்சந்திரா" படம் ஒன்று தயாராவதாக, நான் செய்தி படித்தேன். அது என்ன ஆயிற்று ?

அப்படி ஒரு படத்திற்கு ஒருவர் ஏற்பாடுகள் செய்து ஓரளவு படமாக்கியிருப்பது என்னவோ உண்மைதான். ஆனல், ஒன்று நிச்சயம். அதை ஏற்பாடு செய்தவர் ஆரம்பச் செலவுகளுக்காகப் பட்ட கடனை அடைக்கவென "ஹரிச்சந்திரனாக" இடுகாடு காத்து, கஷ்டப்படவில்லை என்பது நிச்சயம்.

க. சந்துரு (திருச்சி-2)

................நடிகையின் உடம்பு நாளுக்கு நாள் பருத்து வருகிறதே.

அதுதான் அவருக்குக் கிடைத்துவந்த சந்தர்ப்பங்கள் குறைந்து வருகின்றனவே!

வ. தமிழரசன் (காஞ்சீபுரம்)

இந்த ஸ்புட்னிக் யுகத்தில் கூட ஏன் சிலர் புராணப் படங்கள் தயாரிப்பதில் கவனம் செலுத்துகின்றனர்.

ஸ்புட்னிக்கூட போகமுடியாத மோட்ச லோகத்தின் கதைகளைத் தாங்கள் தயாரிப்பதாக அவர்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம் அல்லவா ?

பி. கங்கம்மா (நாகை)

பொறாமை என்பது உண்மைக் காதலின் அறிகுறியா ?

இல்லை. அடிபட்ட பெருமையின் குமுறல்தான் அது.

கே. ராஜாமணி (வாளாடி)

ஐக் என்பது யார் ?

பல லட்சக்கணக்கான அமெரிக்கர்களின் டாலர் ஆசையை—வெறியை—வெளிப்படுத்தும் மைக்.

விமலா ரமணி (புதுவை)

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பத்து வருடங்களுக்கு முன்னரேயோ, அல்லது இன்னும் ஐந்து ஆண்டுகள் கடந்தோ இறந்துபோயிருந்தால்......?

இவ்வளவு புகழோடு போயிருக்கமாட்டார் என்பது நிச்சயம்.

அவர்கள் விளையாடுவது கண்ணாமூச்சி இல்லை, 'லவ் கேம்'. —"திருடாதே"யில் எம். ஜி ஆர். – சரோஜாதேவி.

பி. ராசகோபால் (திருமங்கலம்)

நீங்கள் சிரசாஸனம் செய்வது உண்டா?

என் தலைக்கு அதைவிட உபயோகமான வேலை கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் அப்படியே நிறைவேற்றி வருகிறவன் நான்.

வி. முத்துராமன் (கஞ்சனூர்)

என் மனைவி எதற்கெடுத்தாலும் "நான் தற்கொலை செய்துகொண்டு விடுவேன்" என்று பயம் காட்டுகிருளே, நான் என்ன செய்யட்டும்.

அவள் அப்படிக் கேட்கும்போது ஒரு தடவை, "சரி செய்துகொள்" என்று நீங்கள் சொல்லிவிடுங்கள். பிறகு உங்களிடம் அவள் அப்படிச் சொல்கிருளா பாருங்கள்!

சி. பா. ராமசாமி (மன்னார்குடி)

எனக்கு ஐம்பது வயதாகிவிட்டது. என்னைக் கண்டு எந்தப் பெண்ணும் புன்னகை புரிய மாட்டேன் என்கிருள், என்ன செய்யட்டும்?

உமது பொய்ப் பற்களைக் கழட்டிவிட்டு, பெண்களிடம் பேசிப் பாரும், நீங்கள் பேசும் அழகைப் பார்த்து அவர்கள் புன்னகை என்ன, வாய்விட்டே விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

என். கணபதி (சிவகிரி)

'ஸெக்ஸ்' பற்றித் தெரிந்துகொள்ள ஒரு புத்தகம் சொல்லுங்கள்.

பெண். உங்கள் வாழ்க்கை முழுவதுக்கும் ஒரு பிரதி போதும்!

வஜ்ரவேலு (மேலூர்)

ஒரு பெண்ணைக் காதலிக்க நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

நிறைய தமிழ்–இந்தி–ஆங்கில காதல் படங்களைப் போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் இது.

சுந்தரம் (விருதுநகர்)

ஏ. பி. நாகராஜன் பி. ஏ. பட்டம் பெற்றவரா?

பி. ஏ.யைத் தலைகீழாக முன்னே கொண்டவர் அவர், அவ்வளவுதான்!

'கருங்குயில் குன்றத்துக்
கொலை'' என்ற பிரபல
பழைய நாவல்தான்
''மரகதம்'' என்ற கவர்
சிப் பெயரில் ஏராளமான
பொருட்செலவில் திரைப
படமாகத்
தயாராகி
வருகிறது.
பக்ஷிராஜாவின்
மரகதம்
டைரக்ஷன்
S.M. ஸ்ரீராமுலுநாயுடு

ஏ. சே.
சகரின்
ரம்மாண்.
ான கலைவண்
ப கமழும் கண்
வர் காட்சி
ஜாடனைகள்
டத்தின் ஒரு
சிறப்பான
அம்சம்.



சிவாஜி கணேசனும் பத்மினியும் உணர்ச்சியோடும் உருக்கத்தோடும் நடித்து சிறப்பிக்கின்றார்கள். முற்றிலும் புதிய பாகம் ஏற்று பாலச்சந்தர் நடிக்கிறார்.

காட்சிக்குக் காட்சி விறு
விறுப்போடு பிணைப்பட்
டிருக்கும் இத்திரைக் கதை
க்கு சொல்லழகும், பொருளா
ழமும் பொதிந்த வசனங்களை
'முரசொலி' மாறன் மிகவும்
திறம்பட எழுதியிருக்கிறார்.
"மலைக்கள்ளனு"க்குப பிறகு
ஸ்ரீராமுலு நாயுடு நேரிடை
யாக கவனம் செலுத்தி
டைரெக்ட் செய்யும் தமிழ்ப்
படம் இது.

கோலாட்டம் போட்டாலும், கும்மி அடித்தாலும், பரத நாட்டியம் ஆடினாலும், கூந்தல் அலங்காரம்தான் பெண்களுக்கு முக்கியம்.

கேசவர்த்தினி உபயோகித்து கைக்கு அடங்காதபடி கேசத்தை பெருக்கிக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி ஷாம்பூவினால் தலையை மணமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கோயமுத்தூர்-1.

பொதுஜனம் பேசுகிறார்

என்ன மோகமோ ?

திரையில் தோன்றும் புது முகங்களான ஒரு நடிகரோ அல்லது நடிகை ஒருத்தியோ சிறிதளவு புகழ் ஏற்பட்டதும், தங்களது உண்மைப் பெயரை மாற்றி, புதிதாக ஒரு சினிமாப் பெயர் வைத்துக் கொள்வது என்பது இப்போது சகஜமாகி விட்டிருக்கிறது. அழகான பெயர் தேவைதான்; ஆனால் பெயர் அழகாயில்லை என்பது வெற்றி தோல்விக்குக் காரணமாக முடியாது. பெயர் புகழைத் தேடி வருவது கிடையாது. புகழ்தான் பெயர் நிலைத்திருக்க உதவுகிறது. ஆகவே, புகழுக்குப் பெயரைத் தேடுவதைவிட தங்கள் பெயர் புகழ் பெறுவதற்கு அத்துறையில் சிரத்தையும் ஆர்வமும் காட்டுவதில் புது முகங்கள் கவனம் செலுத்துவது நலம்.

புலியூர், ஏ. எஸ். பரதன்.

கோமாளித்தனம்

நம் படங்களில் இன்று கையாளப்படும் சங்கீதம் மேனாட்டு சங்கீதமும் இந்திய சங்கீதமும் சேர்ந்த ஒரு கலப்படமாக இருக்கிறது. அது எப்படி யிக்கிறது? புல் சூட்டும் கோட்டும் அணிந்த ஒருவன் கட்டுக் குடுமித் தலையுடன் காட்சி அளிக்கும் கோமாளித்தனத்தைப் போல் இருக்கிறது. மேனாட்டு சங்கீதத்தை ஸ்டண்ட் படங்களிலும் ஹாஸ்யப் படங்களிலும் கையாளுவதைக் கூட சகிக்கல்ாம். ஆனால் அவைகளை புராணப் படங்களிலும் புகுத்துவது கண்டிக்கத்தக்க செய்கையாகும். எத்தகைய சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் பயன் படுத்தத் தகுதியான அம்சங்கள் நம்நாட்டு சங்கீதத்தில் இருக்கின்றன. மேனாட்டார் இந்திய சங்கீதத்தை அவர்கள் படங்களில் புகுத்துவது கிடையது. அவை தங்கள் படங்களுக்குப் பொருந்தா என்பதை அவர்கள் உணர்ந்து நடக்கிறார்கள்; அது மட்டுமல்ல காரணம். அவர்கள் கலப்பற்ற தங்கள் நாட்டு சங்கீதத்தை கௌரவிப்பதில் பெருமை அடைகிறார்கள். எந்த சூழ்நிலைக்கும் ஏற்ற இசை நம் நாட்டு சங்கீதத்தில் இருக்கிறது. யாருக்கேனும் சந்தேக மிருந்தால, சங்கீத வித்வானாகிய நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

சென்னை-5
சுப்பிரமணியம்.

வீண் புகழ்ச்சி

பத்திரிகைகளால் "ஓகோ" என்று புகழப்பட்ட "மதுமதி" இந்திப் படத்தை நான் சமீபத்தில்தான் பார்த்தேன். ஆவலுடன் படம் பார்க்கப்போய் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தேன். உயிரில்லாத இப்படிப் பட்ட ஒரு பழைய கதையை பிரபல டைரக்டர் பிமல் ராய் எப்படித்தான் தேர்ந்தெடுத்தாரோ? எந்த அம்சமுமே எதிர் பார்த்த அளவுக்கு சிறப்பாக இல்லை. திலீப்குமாரின் திறமை வெளிப்படவே இல்லை. வைஜயந்திமாலா அலங்கரித்த கடை பொம்மையாகத் தோற்றமளிக்கிறார். சங்கீதமும் ஒளிப்பதிவும் சிறப்பாக இருக்கின்றன. நீண்ட படம், அத்துடன் ஆமை வேகத்தில் நகர்கிறது. இப்படம் பார்க்க அசாத்தியப் பொறுமை தேவை.

சென்னை – 7 ஆர். மனோகர்,

சென்னை நியூகுளோப், பிராட்வே, மகாலக்ஷ்மி,
திருமகள் மற்றும் தென்னாடெங்கும்.

ஆடும் அழகு பொம்மை

சமீப காலமாக வைஜயந்திமாலா நடித்து வெளிவந்த படங்களை யெல்லாம் நான் பார்த்தேன். குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டவென, சாவி கொடுத்து விட்டால் ஆடும் அழகு பொம்மைகள் இப்போது வந்திருக்கின்றனவே, அந்த பொம்மை மாதிரித்தான் இருக்கிறார் வைஜயந்திமாலா. ஆட்டத்திலே துடிதுடிப்பு இருக்கிறது. ஆனால் உயிர்த் துடிப்பு இல்லை. அழகு இருக்கிறது ஆனால், நடிப்புத் திறமை இல்லை. இருந்தும் வடநாட்டில் பல படங்களில நடிக்கிறார் என்றால் அது ஆச்சரியமான விஷயம்தான்!

பரமக்குடி — வி. சிங்காரம்

இந்தத் தணிக்கை போர்டாருக்கு. கண்ணுக்கு எண்ணெய் போட்டுக் கொண்டு, படத்தில் எதை வெட்டலாம், எந்தக் காட்சிகளை மீண்டும் படமாக்கும்படி உத்தரவு பிறப்பிக்கலாம் என்பதிலேயே கருத்தாக இருக்கிறார்கள். எழுத்து உரிமையும் பேச்சு உரிமையும் வழங்கி யிருக்கும் இந்த நாளில் "அந்த வசனம் தப்பு; இந்த வசனத்தை வெட்டு" என்று தர்பார் நடத்தும் தணிக்கை போர்டாரின் போக்கு மாறியே தீர வேண்டும்.

அரிமழம், — அன்புராசன்

யாருடைய வெற்றி?

ஒரு படத்தில் குறிப்பிட்ட பாட்டு ஒன்று மிகவும் பிரபல மாகிவிட்டால் அந்த வெற்றி சங்கீத டைரெக்டருடையது என்றுதான் பலர் கருதுகிறார்கள். ஆனால், அது முழு உண்மை அல்ல என்பது என் அபிப்பிராயம். ஒரு பாட்டை எவ்வளவு தான் கவர்ச்சியாக சங்கீத டைரெக்டர் அமைத்துவிட்டாலும் அதைப் படமாக்குவது படத்தின் டைரெக்டரின் திறமையில் தான் இருக்கிறது. மிகச் சிறந்த பாட்டு கூட, அது சரியானபடி பயன் படுத்தப்படா விட்டால் சப்பென்று போய் விடும். ஆகவே, ஒரு பாட்டு பிரபலமாக சங்கீத டைரெக்டர்,



"தாமரைக் குளம்" படப்பிடிப்பில் டைரெக்டர் வி. ஸ்ரீனிவாஸன் முகவை ராசமாணிக்கம், சௌகார் ஜானகி, எம். ஆர். ராதா.

எரிகிற நெருப்பில்...

பிலிம் வெட்டுக் கட்டுப்பாட்டினால் ஏற்கனவே கசந்து போயிருக்கின்றனர் நம் படத் தயாரிப்பாளர்கள். அவர்கள் கஷ்டம் எங்கே தெரிகிறது

வியாபாரத்தின் வெற்றி
விளம்பரத்தில்தான் இருக்கிறது

★

விளம்பரத்திற்கு வேண்டிய அழகான
கலர், ஆப்டோன் பிளாக்குகள், போட்டோ
ஆப்ஸெட் போஸ்டர்கள் முதலியவைகள்
தயாரிக்க

இந்தியாவிலேயே
இணையற்ற இடம்

★

பிரசாத் பிராஸஸ் பிரைவேட் லிமிடெட்,

சந்தமாமா பில்டிங்ஸ், சென்னை - 26.

மாடல் A 95

6 வால்வு A C, ஆல் வே வ்
3 பாண்ட்ஸ், மாஜிக் ஐ, ம ர த் தி ல
லான காபினெட்.

நிகர விலை ரூ 250/:
(உள்ளூர் வரிகள் வேறு)

தயாரிப்பவர்கள் :
ஜோராட் எலக்ட்ரானிக்
இன்டஸ்டரீஸ,
17, ஹன்டர்ஸ் ரோட், மதராஸ் 7.

டைரெக்டர் இருவருமே காரண கர்த் தாக்கள் தான்.

மன்னார்குடி, பி. ஸ்ரீனிவாசன்.

உழைத்த காசு

நான் விறகு உடைத்துப் பிழைக் கும் ஒரு கூலி. சமீபத்தில எங்கள் ஊரில் நான் ஒரு படம் பார்க்கப் போயிருந்தேன். கடைசி வகுப்பு டிக்கெட்டிற்குத்தான் போனேன். நல்ல கூட்டம். எனக்கு உட்காரக் கிடைத்த இடம் திரைக்கு அருகா மையிலிருந்த வரிசை. அதுவும ஒரு கோடியில். படம் திரையிடப் பட்டதும் நான் கண்ணால் நீர் வடித்தேன். காரணம் திரையில் தோன்றிய உருவங்கள் பூதாகார மாகவும் கோணலாகவும் எனக்குத் தோற்றமளித்ததுதான். எல்லோ ரூம் 'நல்ல படம்' என்று புகழப் பட்ட அந்தப் படத்தை நான் அன்று பார்த்த லட்சணம் இதுதான் நாளெல்லாம் உழைத்து நான் சம்பாதித்த காசு வீணாகப்போயிற்று. எங்கிருந்து பார்த்தாலும் படம் சரியானபடி தெரியும்படி தியேட் டரைக் கட்டவேண்டுமென ஏன் நம் சர்க்கார் ஒரு சட்டம் போடக் கூடாது.

மேல்குடி, வேலுசாமி.

சிறுமைப்படுத்த வேண்டாம்

சிவாஜி கணேசனை, மேனாட்டு நட்சத்திரம் மர்லன் பிராண்டோ வுடன் ஒப்பிட்டுப் பேசினார் அறிஞர் அண்ணா. அதை, "அன்னையின் ஆணை"யில் உபயோகித்துவிட்டார் வசனகர்த்தா மாறன். சிவாஜி கணேசனை தமிழ் நாட்டு மர்லன் பிராண்டோ என்று பலர் கூறியும், எழுதியும் வருகிறார்கள். சிவாஜி கணேசனை இது சிறுமைப்படுத்துவ தாகவே நான் கருதுகிறேன். மர்லன் பிராண்டோ நடித்த படங் களில் சிலவற்றை நான் பார்த் தேன். சிவாஜியின் நடிப்புக்கு அருகில் வரக்கூடத் தகுதி அற்றது அவர் நடிப்பு. சிவாஜி அகில உலகி லேயே சிறந்த நடிகர் என்பது என் கருத்து. இது முற்றிலும் உண்மை என்பதை அரசியல் மேதை ராஜாஜி யும், முயற்சி மன்னன் மேனாவும் கூறியிருக்கிறார்கள். ராஜாஜி "சம்பூர்ண ராமாயணம்" படத்தைப் பார்த்துவிட்டு, 'பரதனுக்காகப் பார்க்கவேண்டிய படம்" என்று சொன்னார். ஏவி. எம். ஒரு பேட்டி யில், "சிவாஜி மாதிரி நடிக்கக்கூடிய ஒரு நடிகர் இல்லாத காரணத்தி னால்தான் நான் "அந்த நாள்" படத்தை இந்தியில் தயாரிக்க வில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார். வேண்டுமானால் மர்லன் பிராண் டோ தம்மை, "நான் மேனாட்டு சிவாஜி கணேசன்" என்று குறிப் பிட்டுக்கொள்ளட்டும்.

திருச்சி - 2 சந்தியா பி. ஏ.,

நல்ல கட்டுரை

படாதிபதி ஏவி. மெய்யப்பச் செட்டியார் தனது ஜப்பான் விஜயத்தைப் பற்றி ''குண்டூசி''யில் எழுதியுள்ள கட்டுரையைப் படித்தோம். ஒவ்வொரு செய்தியும் புதுமையாக இருந்தாலும், பயன் தரக்கூடியவையாகும். யுத்தத்திற்குப் பிறகு, தன்னுடைய ஷீணதசையை, விடா முயற்சியாலும் வலுவான உழைப்பாலும் எதிர்த்துப் போராடி, முன்னணி நாடுகளில் ஒன்ருக இன்று காட்சி அளிக்கும் ஜப்பான், கலை ஆர்வத்திலும் முன்னேற்ற மடைந்ததில் வியப்பில்லை. திரு. செட்டியார் அவர்கள் தந்திருக்கும் ரசமான தகவல்கள் நமது தென்னிந்தியப் படாதிபதிகளுக்குப் பெரிதும் பயன்தரும். இது போன்ற கட்டுரைகளை மேன்மேலும் ''குண்டூசி''யில் எதிர்பார்க்கிருேம்.

ராமன், லெட்சுமணன், ஸ்ரீரங்கம்.

வேண்டாம் மொழி வெறி!

'இந்திப் படங்களைப் பார்க்காதீர்கள்' என்கிற கோஷத்தை, நடிகர் தங்கவேலு தீவிரமாக எழுப்பிக் கொண்டிருக்கிருர். சினிமாத்துறை ஒன்றில்தான் இதுவரை மொழி வெறி தலை தூக்காமலிருந்தது. அந்தக் கைங்கரியத்தையும் பாக்கி வைப்பானேன் என்று, தான் பொறுப்பேற்றுப் புலம்பி வருகிருர் ஹாஸ்ய நடிகர். தென்னவர் பெருமையை வடவருக்குப் புகட்டவும், வடவரின் இசைச் செல்வங்களை தென்னகம் ஏற்கவும், இந்திப்படங்கள் பெரிதும் உதவுகின்றன. சினிமாவைப் பொருத்தவரையில் வடக்கும் வாழவேண்டும், தெற்கும் வாழ வேண்டும் என்ற பரந்த நோக்கம் இல்லையானல், தென்னவர் திறமையைப் பிறர் போற்ற வாய்ப்பிருக்காது. "நயா ஆத்மி", "பாபி" போன்ற படங்கள் முறையே அறிஞர் அண்ணு, முரசொலி மாறன் கதைகள்தானே? இன்னும் துருவிப் பார்த்தரல், இந்தக் கதைகளின் பிறப்பிடமே வடக்குதான். இப்படி கலைத்துறையில் நிலவுகின்ற சமத்துவத்தைத் தகர்த்தெறிய விரும்புகிருர் தங்கவேலு. அவருக்கு இதுவும் ஒரு ஹாஸ்யமோ?

பார்வதி, மதுரை.

சிறந்த ஒப்பனை

'நான் வளர்த்த தங்கை'யைப் பார்த்தேன். ''மாலையிட்ட மங்கை'' யில் பார்த்த மைனுவதியை முழுக்க முழுக்க மாற்றி விட்டார்களே? மின்னலிடை நோவ, அன்ன நடை பயின்ற வன்னக் கிளி மைனுவதி—இந்தப் படத்தில் பண்டரிபாயைவிட இளமை களைந்து காட்சியளிப்பது ஏனோ? திருமணமான பிறகு எடுத்த படமென்பதாலோ? எதுவாயிருந்தாலும் மைனுவதியையும் அழகாகத் திரையில் தோற்றுவித்த 'மாலையிட்ட மங்கை' ஒப்பனையாளருக்கு என் பாராட்டுதல்கள்.

பி. ராமண்ணு, திருச்சி.

தவருன கருத்து

சென்ற மாத (டிசம்பர்) குண்டூசி இதழில் வெளியான முரளீதரன் என்பவரின் கடிதம் தவருன கருத்தில் எழுதப்பட்டுள்ளது.

நாடும் ஏடும் போற்றும் ''நாடோடி மன்னனை'' தமிழ் நாட்டின் தலை சிறந்த பத்திரிகைகள் நலமுடன் போற்றிப் புகழும் நாடோடி மன்னனை, ''படமா, கண்ணருவி'' என இகழ்ந்திருக்கிருர். மேலும் நல்லோரும் எல்லோரும் போற்றும் படியாக மாறுபட்ட இரு குண விசேஷ பாத்திரங்களைத் தாங்கி நடித்து மக்களின் பாராட்டுதலைப் பெற்ற புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின் புதுமை நடிப்பை குறை கூறியிருக்கிருர் அவர். அவரால் கண்ணருவி என இகழப்பட்ட அப்படம் அவர் வாழும் மண்ணிலேயே வெற்றி விழாக் கொண்டாடியிருக்கிறது. எனவே, நண்பர் முரளீதரன் அவர்கள் தம்முடைய தவருன கருத்தை மாற்றிக்கொள்வாராக.

ஹரிஹரன், கோயம்புத்தூர்.

நேயர் விமர்சனம்

[நேயர்கள் அனுப்பும் பட விமர்சனங்களிலிருந்து முக்கியமான பகுதிகள் இங்கு வெளியிடப்படுகின்றன.]

அன்பு எங்கே?

தமிழ் நாட்டுப் பெண் ஒருத்தி தலையை "பாப்" செய்து, 'கௌன்' போட்டுக்கொண்டு கட்டிப்பிடித்து 'காமா-சோமா' எனக் கதறி, குதிர் போலிருந்து குரங்கினும் கேடான ஆட்டமொன்றை ஆடமாட்டாள். ரஸிகர்கள் கட்டாயம் விரும்புவார்கள் என்ற நினைப்பில் - நல்ல அம்சங்களைச் சேர்க்க மறந்தாலும், நமது தமிழ்ப் படங்களில் இந்த "ராக் அண்ட் ரோல்' என்ற நடனக் கூத்தடிப்பு கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு வருகிறது. அது படத்திற்குப் படம் தூக்கி அடிக்கிறது. ஒன்றையொன்று. எதில்? ஆபாசத்தின் எல்லையை எட்டி பார்ப்பதில்.

சாவித்திரி ராமன், திருவல்லிக்கேணி

"அன்பு எங்கே?" படத்தில் கதாநாயகர்களுக்கு என்ன வேலை" மூத்தவன் சதா 'கிளப்' பிற்குப் போய் "ராக் அண்ட் ரோல்" நடனம் ஆடுதல், தலை தெறிக்க ஓடிக் காதல் (?) செய்தல் — இளையவன் இஷ்டம்போல் குடித்து விட்டு—கஷ்டமில்லாது ஊர்சுற்றிவிட்டு குட்டிகளுடன் கும்மாளமிடுதல். இதில்

இன்னெரு வேடிக்கை என்னவென்ருல் "காதல் என்ருல் என்ன?" என்று ஒரு பாட்டு வருகிறது! பாட்டா அது? சூரியகலா தன் உடம்பைத் தூக்கமுடியாமல தூக்கிகொண்டு ஓடுவதும், பாலாஜி பின்னுல் ஓடுவதும்தான் அந்தப் பாட்டிற்கு அர்த்தம்போலும்! போதாக்குறைக்கு ஒரு சாமியார் வேறு படத்தில் வந்து, இடையில் இருந்த இடம் தெரியாமல் அந்தர்த்தியனமாகிருர். நல்லவேளை அவர் வேறு "நேரடி நடவடிக்கை"யில் ஈடுபடாமல் நம்மைக் காப்பாற்றினுரே, அந்த மட்டில் நாம் சந்தோஷமடைய வேண்டியதே.

த. மு. ரா, சென்னை-5

பொருந்தாத வேடத்தை இப்படத்தில் சூர்யகலா புனைவானேன? பின் "போரடி"ப்பானேன்? அடக்கமான பண்டரிக்கு அந்த ஆபாச நடனம் எதற்கோ? சரஸப் பாட்டுக்களை அமைக்க இத்தனை "கவிஞர்"கள் தேவையா? இது ஒரு வேளை நாட்டு 'ஷோக்' காளிகளுக்காக எடுக்கப்பட்ட படம் போலும்! நாகரீகம் என்ற போர்வையில் "ஆபாசம்" என்ற அறியாமை, படம் பூராவாக எட்டிப் பார்க்கிறது. பிள்ளைகள் செய்யும் அக்கரமங்களை கண்ணுரக் கண்டும் காணுமல், காதாரக் கேட்டும் கேளாமல் வாய்மூடி யார் எபபடிப் போனுல் நமக்கென்ன என்று இருக்கும் அபூர்வப் பெற்றோரை இந்தப் படத்திலேயே நாம்

கரகம் ஆடுகின்றனர் - கன
கச்சிதமாகவே
கண்கவரும் ''சுமங்கலி''யில்
கரகம் ஆடுகின்றனர்.

— பக்கிரிசாமியும், மோகனவும்.

காணமுடிகிறது. ஒரு கணவன் மனவி மீது ஆயிரம கோபதாபம் கொண்டிருந்தாலும் ஒரு தம்பி கை நீட்டி அண்ணன் மனைவியை அறையும போது அதைப் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கும் அபூர்வ மனிதப் பிறவியை இந்தப் படததில் தான் சிருஷ்டித்திருக்கிறார்கள். வாழ்க, அவர்கள் கற்பனைத் திறன். ''சீதாபதி'' புதுவை.

"இல்லறமே நல்லறம்" 'இரத்த பாசம்' ஆகிய படங்களைப் பார்த்து விட்டு "அன்பு எங்கே" யைப் பார்க்கும் போது ஈயடிச்சான் காப்பி கதைதான் நம கண்முன் தொங்கி நிற்கிறது. தமிழ்ப்படங்களில் திரும்பத்திரும்ப குடித்துவிட்டு கும்மாள மிடுதல், மனவியை மறந்து மாற்றாளை நாடுதல், போதாக்குறைக்கு 'ராக் அண்ட் ரோல்' நடனத்தை கழுதைபோல் கத்தி குரங்குபோல் ஆடுதல், பிறகு மனைவியே மாணிக்கம என்பதை அறிதல் இவைகள் நமக்குப் புளித்துப்போன பழைய பல்லவிகள்.

எம். நடராசன் எம். ஏ., சென்னை-5,

புதுமையில்லாத இப்படத்தின் கதைக்கு புத்துயிர் ஊட்டுவது 'முரசொலி' மாறனின் இயல்பான வசனங்கள்தான். அடுக்குத் தொடரில்லாது தெளிவாகக் கதையோடு இழைந்து ஓடிவருகிறது மாறனின் வசனங்கள். இந்தப் படத்தில் யாராவது நன்ருக நடித்திருக்கிருர்கள் என்ருல் அது பண்டரியைத் தவிர வேறு யாரும் இல்லை. அடக்கமாகப் பேசி அளவாக அருமையாக நடிக்கிருர். ராஜேந்திரன் இயல்பாக நடிக்க முயற்சித் திருப்பினும் எடுபடவில்லை. பாலாஜி நன்ருக நடிக்க முயன்றிருககிருர். ஆனல், 'மேக்கப்'பும், பேசும் தோரணையும் அதற்கு உதவாததால் தோல்வி அடைகிருர் என்ற கசப்பான உண்மையைக் கூற வேண்டியிருக்கிறது! கணவனுகிய டி. ஆர். ராமச்சந்திரனை மனைவியான மைனவதி கழியால் அடிக்கும் கண்ணருவிக் கூத்தை ஹாஸ்யம் என்று மடையனும கூற மறுப்பான்! சூர்யகலாவை ஏதோ நடிக்கத்தான் வைத்தார்களென்ருல் ஓயாமல் நடனம ஆடவும் வைத்து ரசிகர்களின் பொறுமையை அளவுக்கு மீறி சோதித்திருக்கிருர்கள். கண்களை இறுக மூடிக்கொண்டு அல்லவா பார்க்கநேர்ந்தது? ஆங்கிலப்பாணியில் அவர் ஆடும் நடனம் அதிக விரஸமாக இருப்பதுடன் வெறுப்பும் தட்டுகிறது.

எம். என். ராஜன், எம். ஏ., சென்னை.

அதிசயத் திருடன்

கதையமைப்பு, சங்கீதம், நடனம், நகைச்சுவை முதலிய எல்லா அம்சங்களிலும் தோல்வி கண்ட இப் படத்தை மூன்றேகால் மணி நேரமும் நம்மைத்தியேட்டரில் இருந்தபடி பார்க்கச் செய்வது ஜெமினி கணேசனின் இணையில்லா அதி உன்னத நடிப்பேயாகும். சாவித்திரியின் நடிப்பு இப் படத்தில் போற்றும் படியில்லை. முத்துலட்சுமி அரசியாக நடிப்பதை ரஸிக்க முடியவில்லை.

வெள்ளிவேல்,

தூத்துக்குடி

M.V. ராமன்

அளிக்கும்...

அதிசயப்பெண்

முதல் டெக்னிக்கலர் தமிழ் படம்...

கதை, வசனம்

ஜாவர் சீதாராமன்

சங்கீதம்

S.M. சுப்பையா நாயுடு.

டைரக்ஷன்

M.V. ராமன்

WORLD RIGHTS:- **T.TARACHAND** BOMBAY.4.

Elegant..

அமைதி

ராணன்

இரவு மணி இரண்டு.

பெய்த மழையின் சின்னமாக குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. ஓட்டு வாரையிலிருந்து விழுந்த மழை நீரின் சத்தம் தெளிவாகக் கேட்டது. வானத்தில் மேகக் கூட்டங்கள் விலகி தாரகைகள் தெரிய ஆரம்பித்து விட்டிருந்தன. பிறைச் சந்திரன் மெல்லிய ஒளியை மேகங்களுக்கு ஊடே செலுத்தி நிலத்திற்கு அளித்துக் கொண்டிருந்தான்.

எத்தனையோ உருவங்கள் குழந்தைச் சித்திரம் தீட்டிக் கொண்டிருந்த அந்த வேளையில், மாடியில் படுக்கை அறைக்கு இப்பால் இருந்த வராந்தாவையொட்டிய கைப்பிடிச் சுவரைப் பிடித்தபடி வானத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான் சந்திரன். அவனது உள்ளத்தில் பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. 'எழுப்பலாமா? வேண்டாமா?' சந்திரன் திரும்பிப் பார்த்தான். நீல நிற விளக்கின் ஒளியில் அவன் மனைவி சாந்தியும் அவளை அணைத்தபடி குழந்தை பாலாவும் படுத்திருந்தது ஜன்னல் வழியாகத் தெரிந்தது. குழந்தை பாலாவிற்கு அப்போது தான் ஆறு மாதம் நிரம்பியிருந்தது.

சந்திரனுக்குத் திருமணமாகி நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. சாந்தி சந்திரனுடைய மாமா பெண். தாய் தந்தையற்ற அவளை அவர் தான் வளர்த்து படிக்க வைத்து தன்னுடைய கம்பெனியிலேயே மானேஜர் உத்தியோகத்தையும் அளித்தார். கொஞ்ச நாள் கழித்து இளமையும் அழகும் போட்டியிட்டுக் கொண்டு பிரதிநிதித்வம் அளித்திருந்த சாந்தியையும் அவனுக்கு திருமணம் செய்து கொடுத்தபோது சந்திரன் அன்புப் பிணைப்பிலே சிக்கித் திணறிவிட்டான். கடைசியில் கம்பெனியையும் அவன் பெயருக்கு உரிமையாக்கி விட்டுத் தான் காலமானர்.

இவ்வளவு உயர்ந்த நிலைக்கும் காரணம், சந்திரனின் பண்பும், அழகும் தான். ஆள் வாட்ட சாட்டமாக பார்ப்பதற்கு நன்றாக இருப்பான். அத்துடன் நல்ல அமைதியான

பண்பும் அமைந்திருந்தது. தனது கணவனின் பெருமையை எண்ணி எண்ணி சாந்தியும் பூரித்துப் போவாள். சந்திரன் இருந்த தெருவிலேயே இரண்டு மூன்று பெண்கள் அவனுக்கு மணமாகும் முன்னரே யிருந்து அவனை விரும்பினர். துணிச்சல காரியான ஒருத்தி தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா என்று கடிதமே எழுதி விட்டாள். ஆனல் சந்திரன் ஒன்றிற்கும் செவிமடுக்க வில்லை. தூய மனத்தினனன அவன் சாந்தியிடமே இதைக் கூறிச் சிரித்திருக்கிருன்.

பாலாவிற்கு முன்னல் இரண்டு குழந்தைகள் பிறந்து இரண்டும் சவலையாகவே இறந்து விட்டன. முதல் குழந்தை ரமணிக்கு ஒரு வயது நிரம்பு முன்னரே நீலாவை 'உண்டாகி விட்டாள்' சாந்தி. நீலாவிற்கு ஆண்டு நிறைவின் போது ரமணியைப் பறிகொடுத்து பாலாவையும் உண்டாகியிருந்தாள். இரண்டு மாதங்களுக்கு முன்னல்தான் நீலாவும் அதற்குள் உலக துன்பங்களைத் தெரிந்து கொண்டுதானே என்னவோ போய் விட்டாள். அதிலிருந்து சந்திரன் மிகவும் கட்டுப்பாடாக இருந்தான். குழந்தை பாலாவாவது தங்க வேண்டுமென்ற ஒரே ஆசையினல். அப்படி ஓரிரண்டு முறை கட்டுப்பாட்டை மீற முயன்றபோது கூட சாந்தி தடுத்துவிட்டாள். அவனும் அவள் கூறியதிலிருந்த நியாயத்தை உணர்ந்துவாளாவிருந்துவிட்டான் ஆனல், இன்று எவ்வளவோ முயன்றும் அவனல் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. சாந்தியை எழுப்பினலும் இணங்க மாட்டாள் என்று தெரியும். அதைப் பற்றித்தான் அவன் மனத்தில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.



...அன்பும் பண்பும்
அமைந்த மங்கை...

கிருஷ்ணன் – பஞ்சு தயாரிப்பான "மாமியார் மெச்சிய மருமக"ளில்

குளிர் காற்று சில்லென்று முகத்திலடிக்க சந்திரன் சுய நினைவிற்குத் திரும்பி வந்தான். மெதுவாக அடிமேல் அடிவைத்து கதவைத்திறந்து சாந்தியை அணுகினன். கனவில் எதையோ கண்டு சிரித்தபடியே புரண்டு படுத்தாள் அவன் அருமை மனைவி. கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு

...தொட்டாலே இனிக்கும்
சர்க்கரை போலே...

ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
நடனமாடும் சாயி-சுப்புலட்சுமி.

மெதுவாக அவள் தலையை வருடினான். சாந்தி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

"என்ன அத்தான், உடம்பு ஏதாவது சரியில்லையா என்ன?" கலைந்து கிடந்த கேசத்தையும் இத்தனை நேரம் விழித்துக் கொண்டிருந்ததால் சிவந்திருந்த அவனது விழிகளையும் பார்த்துவிட்டுத் தான் இப்படிக் கேட்டாள்.

"சாந்தி!"

உள்ளத்திலிருந்த ஆசையெல்லாம் உணர்ச்சி வடிவங் கொண்டு அன்பில் தோய்ந்து அவனிடமிருந்து வார்த்தையாக வெளிப்பட்டது.

"அத்தான்!" திடுக்கிட்டாள் சாந்தி. பயம் கலந்த ஆச்சரியம். குரலில் நன்ருகத் தெரிந்தது.

"சாந்தி!" ஆர்வம் மேலோங்கிய அன்பு அழைப்பு.

"வேண்டாம் அத்தான், வேண்டாம். செய்வது சரியா என்று நீங்களே நினைத்துப்பாருங்கள்."

"நினைத்துப் பார்த்துத்தான் சொல்கிறேன், சாந்தி" அவள் கையைப் பற்றினன். அவள் கை தணலெனச் சுட்டது.

"பேசாமலிருங்கள் அத்தான், குழந்தை பாலாவையாவது வாழ விடுங்கள்." அவள் குரல் கெஞ்சினலும் கூடவே உறுதியும் வெளிப்பட்டது.

"வீணுக நமக்குள் ஒரு சுவரை எழுப்பிக் கொண்டு விடாதே. என்னை ரொம்பவும் நீ சோதிக்கிருய்." ஏக்கம் கோபமாய் மாறி குற்றச்சாட்டாய் வெளிவந்தது.

"நீங்களும் சொல்வதைச் சற்று யோசித்துச் சொல்லுங்கள். நாளைக்கு பாலாவிற்கு ஒன்று ஆகிவிட்டால் அதற்கு நீங்களும் தான் பொறுப்பு." வார்த்தைகள் அவளிடமிருந்து மிகவும் நிதானமாக வெளிவந்தன.

"சரி சரி, நிறுத்து. நாளைக்கு என்னைப்பற்றி ஏதாவது வதந்தி கிளம்பினல் அதற்கு நீதான் பொறுப்பாளி. எனக்கு ஒன்றும் வழி தெரியாமல் இல்லை?"

என்ன பேசுகிருேம் என்று புரியாமலேயே பேசிவிட்டு கலங்கிய உள்ளத்துடன் படுக்கையில் போய் தொப்பென விழுந்தான் சந்திரன்.

"நீங்கள் சொல்லுவது உங்களுக்கே நியாயமாகப் பட்டால் இஷ்டம்போல் செய்யுங்களேன்." பாதி துக்கமும் பாதி ஏக்கமுமாகக் கூறிவிட்டு சாந்தியும் தன் படுக்கையில் பாய்ப் படுத்தாள்.

மெல்லிய விசும்பல் ஒலியிலிருந்து தன் மனைவி சாந்தி அழுது கொண்டிருக்கிருள் என்று மட்டும் சந்திரன் உணர்ந்து கொண்டான். மனம் சற்று சஞ்சலபபட்டது. இருந்தாலும் அவனுடைய மனநிலையில் தான் சொன்னது சரியென்றே அவனுக்கு அப்போது பட்டது. சிந்தித்தபடியே மெதுவாகக் கண்ணயர்ந்தான்.

ஆனல் சாந்தியோ படுக்கையில் நிலைகொள்ளாமல் புரண்டுகொண்டிருந்தாள். கணவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதில் ரீங்காரமிட்டுக்கொண்டே இருந்தன. அவன் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்று அவள் அறியாதவளல்ல. அவன் நினைத்தால் அவனுடைய அழகுக்கும் அந்தஸ்துக்கும் எத்தனையோ பெண்கள் அவன் காலடியில் விழத் தயாராக இருந்தார்கள். அவனும் ஓர் ஆண்தானே! எத்தனை நாள்தான் பொறுத்துக் கொண்டிருப்பான். தான் அவ்வளவு கடுமையாகப் பேசியிருக்கக் கூடாது என்று சாந்தி தன்னையே நொந்து கொண்டாள். ஒருகால் அவன் நிலை தவறி விட்டால்? நினைக்கவே சாந்திக்கு நடுக்கமாயிருந்தது.

சந்திரனைப் பார்த்தாள், தூக்கமா இல்லையா என்று கூற முடியாதபடி கண்கள் மட்டும் மூடிக் கிடந்தன. நெற்றியில் புருவங்களுக்கு மேலாக வியர்வை அரும்பு கட்டியிருந்தது. மெதுவாக எழுந்து சென்று தன் புடவைத் தலைப்பால் வியர்வையை ஒற்றி எடுத்தாள். சந்திரன் விழித்துக் கொண்டான்.

"சாந்தி?" குரலில் கேள்விக் குறி தொக்கி நின்றது.

"அத்தான்...என்னை மன்னித்து விடுங்கள், நான்தான் தவறுசெய்து விட்டேன்."

"இல்லை சாந்தி, நீதான் என்னை மன்னிக்க வேணடும். உன்னிடம் நான் அவ்வளவு முரட்டுத்தனமாகப் பேசியிருக்கக் கூடாது. குழந்தை பாலாவாவது ஆண்டவன் அருளால் நமக்குத் தங்கியிருக்கட்டும். அதற்காக இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திருப்போம்." மெல்ல அவளை அணைத்தபடி, "போய்ப் படுத்துகொள். நாழியாகி விட்டது" என்று ஆறுதலாகக் கூறினன்.

Printed by K. Ganapathiraman at the Vadapalani Press, Madras-26 and Edited and Published by K. Radhakrishnan, 6 Conronsmith Road, Madras-6 for the proprietor of M/s. Nataraja Publications.

ன்னை ஸ்ரீகிருஷ்ணா, வெல்லிங்டன், ராக்ஸி
மற்றும் தமிழ் நாடெங்கும்
ஜனவரி
14உ முதல்
அன்னபூர்ணாவின்
மஞ்சள் மகிமை
வசனம் ஸ்ரீதர் ★ டைரக்ஷன் A சுப்பாராவ் ★ தயாரிப்பு D.மதுசூதன ராவ் B.A.
உரிமையாளர்கள்
மஹாலக்ஷ்மி பிக்சர்ஸ்.. மதராஸ்

இலங்கையில் கிடைக்கும் இடம்: A. V. R. A. LTD., Colombo.
ரேடியோ ஸிலோன் 41-72 மீட்டரில் 'இசை விருந்து'—
வெள்ளிக்கிழமை தோறும், மாலை 6-30 முதல் 6-45 வரை.